திராவிடநாடு

27–11–60 | வாரவெளியீடு

முறையோ சொல்வாய்!

— ○ இராம. இராமநாதன் ○ —

முத்துதனை விளைக்கின்ற கடலா இல்லை?
முத்தமிழர் அரசியலில் முறையா இல்லை?
சத்தான விளைபொருள்கள் இங்கா இல்லை?
சங்கத்தார் தமிழுக்குச் சுவையா இல்லை?
வித்திட்டால் ஏனய்யா விளைவா இல்லை?
விரைந்தோடி வருகின்ற ஆறு இல்லை?
இத்தனையும் இருந்துநமக் குயிரே இல்லை.
எத்திசையோ பெறுகின்ற இன்பம் இல்லை!

சாவுக்கே ஆட்சியினர் வழியைத் தேடிச்
சதிசெய்தே திட்டங்கள் போடுகின்றார்
வாழ்வுக்கு வடக்கேதான் வளத்தைக் காட்டி
வறுமைக்கு வழிகண்டார் தெற்கில் அன்றோ!
போருக்குப் புறப்பட்ட தமிழா இன்று
புறமுதுகு காட்டுவதோ உந்தன் செய்கை!
ஓய்வுக்கே இடமின்றி உழைக்கும் நீதான்
உறங்குவதோ இத்துறையில் முறையோ சொல்வாய்!

தொடுவானம்!

சுதா

மாலை நேரம்!

இயற்கையின் எழிற்கூத்திற்கு ஏற்ற வேளை!

கதிரவன் செக்கச் சிவந்து மேற்கு வானில் சென்று மறைந்துகொண்டிருந்தான். சின்னஞ்சிறு பறவைகள் வண்ணச் சிறகடித்து, கூடுநோக்கி வானவீதியில் பறந்துகொண்டிருந்தன. மலரில் ஊறிய மதுவையுண்ட வண்டுகள் மயக்கம் தெளிந்து மலரைச் சுற்றிச் சுற்றிப் பண்ணிசைத்தபடி பிரியா விடைபெற முயன்றன.

நான் ஆற்றங்கரை மணல்மீதுபடுத்தபடி விண் குனிந்து மண்ணிற்கு முத்தமிடும் தொடுவானக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

என் கண்களும் காதுகளும் எழிற் காட்சியிலும், இனிய ஒலிகளிலும் ஈடுபட்டிருக்கும்போது, என்னுள்ளம் மட்டும் வேதனையூட்டும் இன்றைய நம் நாட்டின் மொழிப் பிரச்சினை பற்றி எண்ணிக்கொண்டிருந்தது.

இல்லாத — இருக்கமுடியாத— ஓர் 'ஏக இந்தியா'வின் ஒற்றுமையைக் காப்பதற்காகத் தேசிய மொழி என்னும் பெயரால் இலம்பாடி மொழியை —இலக்கிய இலக்கணமில்லா மொழியை—இந்தியை—எல்லா மக்கள் மீதும் புகுத்துவதும், எதிர்த்துக் கேட்டால் ''இல்லை! இல்லை!! நாங்கள் கட்டாயமாகப் புகுத்தவில்லை! மக்கள் தாங்களே ஏற்றுக்கொள்ளும்வரை காத்திருப்போம்; மாநில மொழிகளும் நல்ல நிலையை அடைய முயலுவோம்!' என்று வஞ்சக மொழிபேசி, முன்னமே சிறுகச் சிறுக, தபால், தந்தி, பணவிடைத்தாள், பணம் முதலியவற்றில் இடம்பெற்றுவிட்ட இந்தியை இப்போது புகைவண்டிப் பயணச் சீட்டுகளிலும் புகுத்தமுயலும் மத்திய அரசினரையும்; அவர்கள் செய்யும் செயல்கள் யாவையும் சரியே எனக் கூறித் தஞ்சாவூர் பொம்மைகளைப் போல் தலையசைக்கும் தமிழ்நாட்டு மந்திரிகளைப் பற்றியும் எண்ணிக் கொண்டிருந்தேன்.

உடல் ஆற்றங்கரையின் மணல் மீது படுத்துக்கிடந்தது. உள்ளமோ மொழிப் பிரச்சினையில் மூழ்கியிருந்தது.!

கண்களும் இனிய காட்சிகளை மறந்து கருத்துடனே ஒன்றின.

விம்மும் ஒலி!

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை. ஏதோ சிந்தனையில் ஏற்பட்ட கோளாறு என்றெண்ணினேன்.

மறுபடியும் அதே ஒலி!

மங்கிய அந்தி ஒளியில் உற்று நோக்கினேன். யாரோ ஒரு பெண் சற்றுத் தூரத்திலமர்ந்தபடி அழுதுகொண்டிருப்பது தெரிந்தது.

எல்லா உயிரினங்களும் இன்பத்தின் பிடியிலிருக்கும் இந்தமாலை நேரத்தில், இப்பெண் மட்டும் ஏங்கியழும் காரணத்தை அறிய ஆவல் கொண்டேன்; அவளருகில் சென்றமர்ந்தேன்.

''யார் நீங்கள்? எதற்காக அழுகிறீர்கள்?'' என்றேன்.

என் குரல் கேட்டுத் திரும்பிய அம்மங்கை, தன் கண்களைத் துடைத்துக் கொண்டு தன் குறைகளைச் சொல்லத் தொடங்கினாள்!

''உன்னிடம் கூறாமல் வேறு யாரிடம் கூறப்போகிறேன்? கேள்! மகனே! கேள்! நான் தான் நிலமடந்தை...'' கூறிவிட்டு என்முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

''யார்! என்னை மடிமீது தவழவிட்டு மனமகிழும் என் நிலத்தாயா? உங்களுக்கென்னம்மா குறை? தாய்க்குப் பழியென்றால், தன் தலையைத் தரவும் தயங்காத்தன்னேரில்லா எத்தனையோ தமிழ் மக்கள் உன் மடியிலே! கரும்பும், நெல்லும்; காசறு மணியும், அகிலும் தேக்கும்; முகிலும் பவளமும் உன் மேனியிலே! பொன்னும் இரும்பும் இன்னபிற போற்றற்கரிய புதைபொருள்களும் உன் வயிற்றிலே! இவையெல்லாமிருந்தும் உங்களுக்கென்னம்மா குறை?''

''ஒரு பெண்ணுக்கு, பொன்னும் பொருளும் மட்டுமிருந்துவிட்டால் போதுமா? மகனே!''

''பின் உங்கள் குறை என்னவென்று கூறுங்களம்மா! எந்தப்பகைவர்களாவது உங்கள் உள்ளம் புகையும் வினைசெய்தார்களா? சொல்லுங்கள்! நீங்கள் கூறி முடிப்பதற்குள் பகையைச் சூறையாடிப் பணியவைக்கின்றேன். கூறுங்களம்மா!''

''வெஞ்சினம் வேண்டாமடா கண்ணே! உன் ஆற்றல் எனக்குத் தெரியாததா! உன்னைப் பழித்தோரின் விழி பிதுங்கத் தலையில் கல்லேற்றியவனன்றோ நீ! போருக்குச் செல்லத் தடைசெய்த பெரிய இமயமலையையும் தண்டுகொண்டு தாக்கி, தலைகீழாக்கி அதன் முதுகில் வெற்றி முத்திரைகளைப் பொறித்தவரை மூத்தோராகப் பெற்றவனல்லவா நீ! கடுஞ்சினத்தோடு சீறிவரும் கடலை அடக்கிக் கலம் செலுத்திக் கரை கண்டவனன்றோ நீ! நீ நினைத்தால் விண்ணையும் சாடி வெற்றி கண்டு மண்ணுக்குக் கொண்டுவருவாயே!''

''வேண்டாமம்மா இந்த வேதனை தரும் விளையாட்டு! உங்கள் விழிகளில் நீர்வடிந்தால் என்னுள்ளத்தில் குருதி கொட்டுமென்பது தெரியாதா உங்களுக்கு?''

''கூறுகின்றேன்! வேதனை வேண்டாமடா கண்ணே! என் கண்ணீருக்குக் காரணம் உன் தந்தைதானடா!''

''என்ன! நீங்கள் வடிக்கும் கண்ணீருக்குக் காரணம் என் தந்தை விண்ணரசனா? எவருக்கும் எட்டாஉயரத்திலிருக்கின்றாரென்ற எண்ணமா? தாயைக் கொடுமைக்குள்ளாக்கியவர் தந்தையானாலும் சரி, தண்டனை அடைந்துதானம்மா தீரவேண்டும்! அவர் உனக்குச் செய்த கொடுமை என்னம்மா? கூறுங்கள்!''

''பொறு மகனே! பொறு!! மகன் கேட்கிறாய் என்பதற்காக என் மனம் திறந்து கூறுகிறேன் கேள்! நானும் உன் தந்தையும் கணவன் மனைவியாக ஆகவில்லை! ஆக்கப்பட்டோம்! அன்றிலிருந்து இன்றுவரை நாங்களிருவரும் ஒருநாள்கூட உளமகிழ ஒன்றுகூடி உறவாடியது இல்லையடா மகனே!''

''அம்மா! போதுமம்மா! போதும்! இதைவிட ஒரு பெண்ணுக்கு வேதனை தர வேறென்னவேண்டும்? இவ்வளவு நாட்களாகத் தொடுவானக் காட்சியில் நீயும் தந்தையும் கலந்துறவாடுவதைப்போல கலைஞன் தீட்டிக்காட்டும் ஓவியத்தையும்; உன் மலை மார்பின்மீது தந்தை மார்புறத் தழுவ தாய்க் கவிஞன் எழுதிய காவியத்தையும் உண்மையென்று எண்ணினேனம்மா!''

''நீ மட்டும் இல்லையடா மகனே! அனைவரும் அப்படித்தான் நினைக்கிறார்கள். உலகிற்கு நாங்கள் ஒன்றுபட்டு வாழ்வதுபோல் தோன்றினாலும் உண்மையில் எங்களுக்குள் ஒட்டுமில்லை; உறவுமில்லை! அதுமட்டுமா..''

(4-ம் பக்கம் பார்க்க)

ர் 19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (27—11—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 20

அநீதிக்குமேல் அநீதி

இலங்கை அரசாங்கம் இனி முன்போல் நடந்து கொள்ளாது. இங்கிருந்து பிழைப்புத்தேடி இலங்கை சென்று வாழும் மக்களுக்கு இனி நல்ல பாதுகாப்புகளும் வசதிகளும் கிடைக்கும். முன்பிருந்த அல்லலும் அவதியும் இனி இருக்காது. காரணம்: இலங்கையை ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர், மிக நல்லவர். அதிலும், இயற்கையாகவே இரக்க சுபாவம் ஏற்படக்கூடிய பெண்கள் இனத்தில் ஒருவர் முதல் அமைச்சர் பதவியில் இருப்பதால், இனி, இலங்கை வாழ் இந்நாட்டு மக்களுக்கு எவ்வித இன்னல்களும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதில் அந்த அம்மையார் பெரிதும் கவனம் செலுத்தி ஆவன செய்வார்கள் என்று பேசப்பட்டது—எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அங்கு, இப்போது, யாரிடமிருந்து நல்லன எதிர்பார்க்கப்பட்டதோ அவர்தம் ஆட்சியில் நடப்பதென்ன? முன்னாள் முதல்வர்கள் கையாண்ட முறைகளை—கொடுமைகளைவிட இப்போது, இலங்கையரல்லாதாருக்குச் செய்யும் இன்னல்கள் இடைஞ்சல்கள் அதிக அளவில் உள்ளன என்று கூறி வேதனைப்படும் வகையில் அவ்வப்போது — புதிது புதிதாகத் தொல்லைகள் தர இப்போதைய அரசாங்கம் முழுமூச்சுடன் முனைந்து வேலைசெய்கிறது.

இருக்கின்ற கொடுமைகள் போதாதென்று இப்போது புதிய ஒரு கொடுமையை — தாங்கமுடியாத கொடுமையைச் செய்ய முற்பட்டிருக்கிறது.

"வாசபர்மிட்"-அதாவது, இங்கிருந்துபோய் அங்கு வாழ்பவர்களுக்கு, அங்கே வாழும் உரிமை வழங்குவது என்ற ஏற்பாட்டின்மீது, ஒவ்வொருவரும் இவ்வளவு தொகையை அரசாங்கத்துக்கு ஆண்டுதோறும் வரியாகக் கட்டியாக வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டு அதன்படி வரி வசூலிக்கப்படுகிறது.

அந்த ஆகாத வரி, இப்போது அநியாய வரியாக உயர்த்தப்பட்டிருக்கிறதாம். அதாவது ஆள் ஒன்றுக்கு ரூபா 2-ல் இருந்து ரூபா 400-00க்கு உயர்த்த இலங்கை சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்,

இதனால், குறைந்தது முப்பத்தாறாயிரம் மக்கள்—இங்கிருந்து சென்றவர்கள்—பாதிக்கப்படுவர் என்று கூறப்படுகிறது. அதிலும், இங்கிருந்துபோய் வாழ்பவர்கள் மூன்று மாதங்களுக்குமேல் அங்கு தங்க நேர்ந்தால், மேலே குறிப்பிட்டபடி "வாழும் உரிமை வரி" கட்டியாகவேண்டுமென்று சட்டம் இருக்கிறது.

இந்த வரியால் பெரும் அளவுக்கு அவதிக்குள்ளாகக் கூடியவர்கள் சிறு தொழில் செய்து வயிறு வளர்க்கும் நிலையிலுள்ளவர்களேயாகும். சில்லறை வியாபாரிகள், தையல் வேலை செய்வோர், முடி திருத்துவோர், வீட்டு வேலை செய்வோர் ஆகிய இப்படிப்பட்ட சாதாரண அன்றாட வருவாயை வைத்து அன்றாட வாழ்க்கையை ஓட்டுபவர்கள்தான் இந்த வரியால் பெரிதும் பாதிக்கப்படுவர் என்ற இந்த விபரங்களையெல்லாம் டில்லிப் பார்லிமெண்டில், துணை வெளி விவகார அமைச்சர் திருமதி இலட்சுமிமேனன் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

ஆனால், இதுபற்றி இலங்கை முதல்வரும் டில்லி முதல்வரும் கலந்துபேசி ஏதாவதொரு முடிவுக்கு வரும் ஏற்பாடு உண்டா என்று கேட்ட கேள்விக்கு "இதுபற்றி அண்மையில் கூடிப் பேசும் ஏற்பாடு ஏதும் இல்லை" என்று நேரு பண்டிதர் பதிலளித்துவிட்டார்.

இங்கிருந்து போய் இலங்கையில் அவதியுறும் மக்களில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேர் தென்னகத் திராவிடப் பெருங்குடி மக்களே என்பதை எண்ணும்போதுதான், பண்டித நேரு அவர்களின் பதில் இன்னும் நம்மை வேதனைக்குள்ளாக்குகிறது. நேர்மைக்கும் பொறுப்புக்கும் அப்பால் நின்று இவ்விதம் பேசுகிறாரோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

அநீதிக்குமேல் அநீதி செய்யும் இலங்கை அரசின் போக்கைப் பார்த்துக்கொண்டு ஏனோதானோ என்றிருப்பது ஒரு பொறுப்புள்ள இடத்தில் வீற்றிருப்பவருக்கும் நல்லதல்ல, அவருடைய ஆட்சிக்கும் நல்லதல்ல.

பேரிழப்பு

திரைப்பட உற்பத்தியில் முன்னணியில் நின்று, நல்ல முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட கதைகளைப் படமாக்கி மக்களின் மதிப்பைப் பெற்றவரும், நமது உற்ற நண்பருமான ஜூப்டர் உரிமையாளர் **சோமசுந்தரம்** அவர்கள் திடீரென்று மறைந்த செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். அவருடைய இந்த எதிர்பாராத மறைவு பட உலகுக்கே ஒரு பேரிழப்பாகும்.

தந்தை திடீரென்று இறந்துவிட்டார்கள் என்பதை அறிந்த அவரது அருமைப் புதல்வி சாந்தாவும் தந்தை இறந்த சிலமணி நேரத்தில் ஏக்கத்தால் உயிர் துறந்த செய்தி மேலும் நம்மை ஆற்றொணாத் துயரத்துக்குள்ளாக்கி விட்டது.

இவர்களின் பிரிவால் ஏங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல் மொழிகளை ஆழ்ந்த அனுதாபத்தோடு கூறிக்கொள்கிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

"இன்னுமென்னம்மா?"

"உன் தந்தை என்னை வெறுத்தொதுக்கிவிட்டு, நிலவு மங்கையோடு கொஞ்சிக் குலவிக் களிப்புடன் வாழுகிறார்! இந்த வேதனை போதாதென்று வேறு ஒன்றும் என்னை வாட்டுகிறது!"

"உங்கள் வேதனையை வளர்க்கும் அந்த வேறு ஒன்று என்னம்மா? வேதனையால் என்னுள்ளம் வெடிக்கு முன்னே கூறுங்களம்மா!"

"என்நிலை கண்டு கண்சிமிட்டிப் பரிகசிக்கும் விண்மீன்களைப் பார் மகனே! பார்! அவைகள்தானடா என் வேதனையை வளர்க்கின்றன."

"யார்! தன் களங்கத்தை மறைக்க, வெள்ளி முலாம் பூசிக்கொண்டு மேனி மினுக்கும் வெண்ணிலவின் மக்களான விண்மீன்கள்தானே? அம்மா! விடைகொடுங்கள்! உங்கள் நிலைகண்டு எள்ளி நகையாடும் விண்மீன்களை வெட்டிவந்து உங்கள் காலடியில் கொட்டுகிறேன்!"

"வேண்டாமடா மகனே! உன் கற்கண்டு நிகர் சொற்களே போதுமடா எனக்கு! பொறுமையோடிரு! அதுவே போதும்!"

"பொறுமை! பொறுமை!! இன்னுமா பொறுமை!!! நீங்கள் கூறும் பொறுமை என்னும் முறையில் நடந்துகொண்டது போதுமம்மா! போதும்!! 'பொறையுடைமைக்கு' ஓர் எடுத்துக்காட்டாக நீங்கள் இருப்பதால்தானம்மா எதிரிகள் நம்மை ஏமாற்றி ஏற்றம் பெற்றுவிட்டார்கள்!

"இன்னும் மௌனம் ஏனம்மா? உற்ற கணவனுயிற்றே என்று எண்ணுகிறீர்களா? உற்றார், உறவினர் என்றெண்ணாமல் உன் பெருமை தெரியாமல் இழித்தும், பழித்தும், ஒதுக்கி வைப்பவர்களின் கொட்டத்தை அடக்கவேண்டுமம்மா!

"மேட்டுக் குடியில் வாழ்கிறோம் என்ற நினைவுடன் எவரையும் மதிக்காமல் உங்களை இழித்துப் பேசி ஏற்றங்கொள்ளும் இழி குணம் கொண்டோரின் இறுமாப்பை அழிக்க அனுமதி கொடுங்கள் தாயே!"

"உன் உறவினர்போல் நடித்து உன் அழிவிற்குச் சூழ்ச்சிதோண்டும் உன்மத்தர்களை உலகின் முன் நிறுத்தித் தண்டனையளிக்க நீங்கள் தலையசைத்தால் போதுமம்மா! இந்தத் தரணியெல்லாம் உங்களடி பணியச் செய்வேன்!"

"தொடுவானத்தை ஓர் துன்பக் கதையாக முடிக்காமல் இன்பக்கதையாக்க என்னைப்போன்ற எழுச்சி பெற்ற எண்ணற்ற இளங்காளையர்களின் சார்பிலே கேட்கிறேன்! வீணர்களை வெட்டி வீழ்த்தி, வாகை சூடி, உங்கள் வாழ்த்தைப் பெற விடை கொடுங்கள் தாயே!"

*

"கீச்"சென்று சின்னஞ்சிறு பறவையொன்று என்னருகில் வந்து கத்தி என் தூக்கத்தைக் கலைத்துவிட்டு 'விர்'ரென்று பறந்து சென்றது! எதிரே......

தொடுவானம்! விண்ணும் மண்ணும் கலந்து நிற்கும் காட்சி! உண்மையில் இரண்டும் ஒன்றாகிக் கலந்தின்பம் காண்கின்றனவா?

கனவில் கண்ட காரிகை — நிலமடந்தை—கூறியவை நினைவிற்கு வந்தன. எதிரே இருக்கும் தொடுவானம், நிலமடந்தையின் உரையாடல்கள், நான் எண்ணிக்கொண்டிருந்த இன்றைய மொழிப் பிரச்சினை — இந்த மூன்றிற்கும் ஏதோ தொடர்பிருப்பதாக என் மனம் எண்ணியது! நான் ஒன்றோடொன்றை ஒப்பிட்டுப் பார்த்தேன், பொருத்தமாக இருந்ததோடு, ஒரு உண்மையும் புலப்பட்டது.

விண்—இந்த நாடே தம் காலடியில் கிடப்பதாக எண்ணிக்கொண்டிருக்கும் மத்திய அரசு! இணைய முடியாத விண்ணுக்குக், கட்டாய மனைவியாக்கப்பட்டுக் கண்கலங்கி நிற்கும் நிலமடந்தையாக—வடநாட்டு ஆதிக்கத்தின்கீழ் அடங்கிக் கிடக்கும் மாநில மொழிகள் (தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்!) விண்ணோடு கொஞ்சிக் குலவும் வெண்ணிலவாக இந்தி! நிலமடந்தையின் நிலை கண்டு இழித்தும் பழித்தும் பேசி எள்ளி நகையாடும் விண்மீன்களாக—வடநாட்டு இந்தி வெறியர்களும், இங்கிருக்கும் சில ஏமாளிகளும்! ஆம்! மத்திய அரசிற்கும் மாநில மொழிகளுக்கும் உள்ள உறவு 'தொடுவானம்' போன்றதுதான்.

தொடுவானம்! விண்ணும் மண்ணும் இணைந்து இன்புறுவதுபோல் தோன்றினாலும், உண்மையில் விண் மண்ணோடு இணையாது—இணையவும் முடியாது! அதேபோல் மத்திய அரசு மாநில மொழிகளின் வளர்ச்சிக்குப் பாடுபடுவதாகச் சொன்னாலும், செயலில் காட்டாது — காட்ட முடியாது! இந்தியை வளர்க்கவும், வாழ்வூட்டவும் செய்யுமே தவிர, வேறெதையும் செய்யாது!

நம் கன்னித் தமிழும், கனி தெலுங்கும், கன்னடமும், மலையாளமும் வளம்பெற வேண்டுமானால், வாழ்வு பெற வேண்டுமானால் நமக்கென்று ஒரு ஆட்சி, நம் மொழிகளுக்கென்று ஓர் அரியணை வேண்டும். இதுதான் நாம் கேட்கும் 'திராவிட நாடு!' நம் விழிநிகர் மொழியைக் காக்க அனைவரும் எழுச்சி பெறவேண்டும்; வெற்றி காணவேண்டும், அந்நாளே, நமக்கு மட்டுமல்ல, நம் எதிர்கால மக்களுக்கும்—ஒரு நன்னாள்! பொன்னாள்!!

★

நைஜீரியா!

—சோகிநாசன்—

உங்களிடத்தில் சில பொருள்கள்தாம் கிடைக்கின்றன; ஆனால், உங்கள் நாட்டிலோ கிடைக்காத பொருள்களே கிடையாதாமே! இத்தகைய சீரும் சிறப்புக்குரிய ஆண்ட பரம்பரையான உங்களை அடிமைகளாகக் காணும்போது, எங்களுக்கு உண்மையிலேயே சிரிப்பு எழுத்தான் செய்கிறது! என்று நம்மைப்பார்த்து நகைக்கின்றது, நைஜீரியா இன்று!

வெள்ளையர்களின் வெறிப்பிடியிலே இத்தனை காலம் சிக்கிக் கிடந்த நைஜீரியா இன்று விடுதலையின் வெற்றிக் கீதத்தை எழுப்பிக்கொண்டிருக்கின்றது!

நைஜீரியர்களின் உழைப்பை விழுங்கிக்கொண்டிருந்த ஆங்கிலேயர்கள் இன்று அகன்றுவிட்டனர், அவர்களது எல்லைக்கோட்டினின்று!

நைஜீரியாவின் உற்பத்தி இனி நைஜீரியாவிலேயே தங்கும்! இனி அவர்கள் மொழி வளரும் — மக்கள் விழி பெறுவர்!

எவரிடும் எஜமானர்களில்லை. எனவே, இனி அவர்கள் எடுபிடிகளாக இருக்கவேண்டாம்!

வேலையில்லை என்ற நிலை பிறக்காது. வேற்று நாட்டையடைய கள்ளத் தோணி ஏறவேண்டாம்!

அன்னைக்கு அரியாசனம் கிடைத்த பிறகு, அவள் பெற்ற பிள்ளைகள் சாலையிலா விருகட்டி வாழ்வார்கள்? சோறு கேட்டா வீதியிலே நிற்பார்கள்? இல்லை...... இல்லை, சொகுசான வாழ்வு இனி வரவேற்கக் காத்திருக்கிறது அவர்களை!

ஆப்பிரிக்கா கண்டத்திலே சுதந்திரமடைந்து வரும் பல நாடுகளைப் போல், சுதந்திரமடைந்த நாடே நைஜீரியாவாகும்.

அக்டோபர் மாதம் முதல் தேதியன்று ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலையடைந்துவிட்டது! இது பிரிட்டிஷ் காலனிகளிலேயே மிகப் பெரியதாகும். இட்டத்தட்ட பாகிஸ்தானைப் போல் நிலப்பரப்புள்ள இந்நாடு, பிரிட்டனைப்போல் நான்கத்தனை பெரியதாகும்!

இந்நாட்டில் 3½ கோடி ஆப்பிரிக்கரும், 12,000 ஐரோப்பியர்களும் வாழ்கின்றனர். இங்கு கொப்பரா, எண்ணெயும், கொலம்பைட் என்னும் உலோகப் பொருளும் கிடைக்கின்றன. இவர்கள் நிலக்கடலையும் பயிரிடுகின்றனர்.

1958ல் நடந்த மகாநாட்டின் நிர்ணயப்படி, 1960ம் ஆண்டு ஆரம்பத்தில் அந்நாட்டுக்கு விடுதலைகோரி ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர். அதனைப் பிரிட்டிஷ் பாராளுமன்றம் அங்கீகரித்து, 1960 அக்டோபர் முதல் நாள் நைஜீரியாவைத் தனி அரசாக்கிவிட்டனர்!

இதன் தலைநகர் லேகோஸ். இங்கு சமஸ்டி பாராளுமன்றம் செயல்படுகிறது. மேல் சபை, கீழ் சபை என்று இரண்டு சட்டசபைகளுமுண்டு!

ஜாதிகள் இங்கே 250 வகைகள் இருக்கின்றன! மொழியோ பல நூறு கும்! ஆனால், விடுதலையென்றதும் அனைத்தையும் மறந்து அனைவரும் ஒன்று திரண்டனர்! 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற நிலையடைந்தனர்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடும் தனது சுதந்திரத்திற்காகப் போராடிக்கொண்டுதான் இருக்கின்றது—அது அடிமைப்பட்டிருக்கும் காரணத்தால்!

இப்போராட்டத்தைத் தன் பலத்தால் அடக்கிவைக்கக்கூடிய ஆற்றல், ஆட்சிபுரியும் வர்க்கத்திற்கு இருக்கலாம்! ஆனால், அவர்களுடைய உண்மையானதும், நியாயமானதுமான கோரிக்கையை மறுக்க, அவர்களுக்கு உரிமை கிடையாது!

அந்நியர் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் ஒவ்வொரு நாட்டிலும், நாட்டின் விடுதலைக்கான மகத்தான இயக்கமொன்று தோன்றுவது இன்றியமையாததே! சரித்திரத்தின் முடிவான சான்றுகள் நமக்கு இதைத்தான் காட்டுகின்றன.

ஆட்சிபுரியும் அதிகார வர்க்கம் ஒவ்வொன்றிற்கும் இது தெரிந்ததுதான். என்றாலும், அவர்கள் தெரியாதது போலவே பாவனைசெய்து, தம் காரியங்களை நடத்திக்கொண்டே போவர்!

போராட்டம் மிகத் துன்பம் தருவதாயும், நீடித்ததாயும் இருக்குமானால், அவற்றை, ஆளும் கட்சி அடக்கி ஒடுக்கி அவ்வியக்கத்தின் முன்னேற்றத்தை முறியடிக்கவும் செய்யலாம்! ஆனால், தூய குறிக்கோளும், மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற உன்னத இலட்சியமும் கொண்ட எந்த ஒரு இயக்கத்தையும் நசுக்க, பெரிய பலம் பொருந்திய சக்தியாலும் முடியாது!

உண்மையிலேயே அதை நசுக்க முயற்சிக்குமானால், அதற்கு இன்னும் முன்னைவிட உணர்ச்சி மேலிட்டு, அதன் உறுதி மேலும் மேலும் அதிகமாகும்!

நைஜீரியாவின் விடுதலை இந்த ஒரு படிப்பினையைத்தான் நமக்கெல்லாம் காட்டிக்கொண்டிருக்கிறது!

★

குறுக்கே நிற்காதீர்!

"தென் இராச்சியங்கள், அதாவது, தமிழகம்—கேரளம்—கன்னடம்—ஆந்திரம் ஆகிய நான்கு இராச்சியங்களும் ஒன்று சேர்ந்து தங்களுக்கு வேண்டிய திட்டங்களை அமைக்க, டில்லி அரசு வழிவிடவேண்டும்—குறுக்கே நிற்கக் கூடாது. இப்போதிருப்பதைவிட இன்னும் அதிக சுதந்திரம் அளிக்கவேண்டும். திட்டங்களை இங்கு உருவாக்கத், தேவையான பொருள்கள் நிறைய உள்ளன. இங்கு ஏதும் இல்லை என்ற பழைய நினைப்புத் தகர்ந்துவிட்டது" என்ற கருத்துக்களைக்கொண்ட ஒரு தலையங்கத்தைச் சுதேசமித்திரன் 19—11—60-ல் தீட்டியுள்ளது.

நல்ல வழி

டி. எஸ். மணி

"நம் நாட்டைச் சுற்றிப் பார்க்கச் சென்ற நீ, முகவாட்டமாக இருப்பதேன்? நம் நாட்டிலிருக்கும் இயற்கை வளங்களை நினைத்தாலே இனிக்கிறது.

சிறுமலைக்கு ஒரு தடவை நான் சென்றிருந்தேன்......ஆ! அங்கு நீயும் போவதாகச் சொல்லிச் சென்றாயே, போனாயா...? போயிருப்பாய், போயிருப்பாய். நம் நாட்டையே சுற்றிப் பார்க்கச் சென்ற நீ, அங்கு மட்டும் போகாமலா வந்திருப்பாய்! அங்கிருக்கும் பெயர் பெற்ற வாழையையும் பலாவையும் பார்த்தாயா, எவ்வளவு அழகாக இருக்கின்றன. இன்னும் அங்கிருக்கும்எலுமிச்சையும்,ஏலமும், பாக்கும் எழிலோடு காணப்படுமே? ஏன் அங்கிருக்கும் மாபெரும் மருத மரச் சோலைகளைப் பார்த்தால் அங்கிருந்து வரவே மனம் வராதே. அதன் அருகிலே ஓடிக்கொண்டிருக்கும் பாலாற்றைப் பார்த்தாயா...... எவ்வளவு அழகாயிருக்கிறது.

ஆ...!...அதை நினைத்தாலே இப்போது நான் அங்கிருப்பதுபோல் தெரிகிறது. அந்தக் காட்டிலே வாழும் கவரிமான்களும், அதன் கன்றுகளும் பார்க்கப் பார்க்கத் திகட்டாமல்லவா இருக்கும்.

நம் நாட்டிலுள்ள வானளாவி நிற்கும் கோபுரங்களைப் பார்த்தாயா....? அந்தக் காலத்திலிருந்த நம் முன்னோர்கள் அவைகளை எல்லாம் எப்படிக் கட்டினார்களென்று, நான் அவைகளைக் காணும்போதெல்லாம் ஆச்சரியப்படுகிறேன்! சிற்பிகள் தங்கள் திறமை முழுவதையும் அந்தக் கல்லிலேயேகாட்டியிருக்கிறார்கள். இன்றும் அந்தச் சிற்பங்களைக் காணும்போது, அவைகளையெல்லாம் செய்தவர்கள் எந்த உருவத்தில் இருந்திருப்பார்களென்று எண்ணுகிறேன் நான்! எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தாயா......? இவைகளை எல்லாம் நீ பார்த்தாயா இல்லையா...?"

"எல்லாவற்றையும் பார்த்தேன்... அவைகளைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குப் பசியே வருவதில்லை. பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும்போல்தானிருந்தது. ஆனால்...... வளமும், நலமும் நிறைந்த நம் நாட்டில் வஞ்சகர்கள் நிறைந்துவிட்டார்கள்! ஏய்த்துப் பிழைப்பவர்கள் ஏராளமாகிவிட்டார்கள்!! ஏழைகள் வாழ வழியில்லாமல் துடிதுடித்துச் சாகிறார்கள்!!!

ஆம்...! அன்று நான் மதுரையிலிருந்து திரும்பிக்கொண்டிருக்கும் போது, மாடுபோல் கதறியபடி ஒருவன் மதுரை வீதியிலே உருண்டு கொண்டிருந்தான்! அதைக் கண்ட நான் அவனைப்பற்றித் தெரிந்து கொள்ள நினைத்து அங்கு நின்று கொண்டிருந்த ஒருவரிடம் கேட்டேன்.

"யாரோ ஒன்றும் தெரியாத அப்பாவியாம், மாநகரமாம் மதுரையைப் பார்க்க வந்தவனாம், இவனை வஞ்சகமாக ஒருவன் கூட்டிப்போய் இவனிடமிருந்த பணத்தையெல்லாம் பறித்துக்கொண்டு ஓடிவிட்டானாம்!" இப்படி அவர் என்னிடம் கூறினார். எனக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது அதைக் கேட்டவுடன்! பறிகொடுத்தவன் படும்பாட்டைப் பார்த்தால் எனக்கு அழுகை வருகிறது—பறித்துச்சென்றவனை நினைத்தால் ஆத்திரம் பொங்குகிறது! பறித்துச் சென்றவனை அப்போது காண முடியுமா...?! பறிகொடுத்தவனுக்கு ஆறுதல் சொல்லி, அவனை என்னோடு அழைத்துக்கொண்டு வந்து அவன் வீடு சேர்த்துவிட்டு, நேரே திருச்சி வந்தேன்.

நான் வந்து திருச்சி சந்திப்பிலே இறங்கியதும், திகைப்பூட்டும் காட்சியொன்றைக் கண்டேன்! ஒருவன், நல்ல அழகான பெண்ணைக் கூட்டிக்கொண்டு போனான்! அந்தப் பெண் அவன் பின்னால் போவதற்குப் பிரியமில்லாத போல், தயங்கித் தயங்கிப் போய்க்கொண்டிருந்தாள்! எனக்குச் சந்தேகம் வந்தது. சுற்றுமுற்றும் ஒருமுறை பார்த்தேன். அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார் ஒருவர். மெதுவாக அவரை நெருங்கிய நான், "இவர்கள் கணவன் — மனைவியா?" என்று அவரைக் கேட்டேன்.

"இவன் பெரிய ஏமாற்றுக்காரன்! இவனைப் பலகாலமாக எனக்குத்தெரியும். நல்ல அழகான பெண்களைச் சினிமாவில் சேர்த்துவிடுவதாக ஆசையை மூட்டி அழைத்துக்கொண்டு போய், பாவம் அவர்களின் வாழ்வையே பாழ்படுத்திவிடுகிறான்! இவன் பேசும் பேச்சிலே அவர்களின் பெற்றோர்கள் நன்றாய் ஏமாந்து இவனை நம்பிவிடுகிறார்கள். பெண்களையும் இவன் பின்னால் அனுப்பிவிடுகிறார்கள்! பணத்தாசையால் இவன் பின்னால் போன பெண்கள் பணம் சம்பாதிக்கவில்லை — பாபத்தைச் சம்பாதித்துக்கொண்டு, நலமிழந்து நடுத்தெருவிலே திரிகிறார்கள்!" இப்படி அவனைப் பற்றிய உண்மைகளைக் கூறினார் அவர்.

அதைக்கேட்ட நான் மேலும் அங்கு நிற்கவில்லை. அவர்கள் ஏறிய அந்த வண்டியிலேயே ஏறிவந்து அந்தப் பெண்ணை எப்படியும் அவனிடமிருந்து காப்பாற்ற வேண்டும், வாழவைக்கவேண்டுமென்று, சென்னைக்கு டிக்கட் வாங்க நினைத்து, டிக்கட் ரூமை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும்போதே, அந்த வண்டி புறப்பட்டுவிட்டது! அடுத்த வண்டியில் இங்கு வந்த நான், இன்று அவர்களைக் கண்டுபிடித்துவிடலாமென்று காலையிலிருந்து அலைந்தேன்!

ஆனால்......என் கண்களில் அவர்கள் தென்படவில்லை...அகதிகளாய்த் தங்க இடமில்லாமல் தவிப்பவர் பலரைக் கண்டேன்! ஒருவேளைச் சோற்றுக்கு வழியில்லாமல் உடல் ஒட்டி உலர்ந்துதிரியும் பலரைக் கண்டேன்!! சாலை ஓரங்களிலே படுத்தபடி சாவோடு போராடிக்கொண்டிருக்கும் சிலரையும் கண்டேன்!!! இவ்வளவையும் கண்ட என் கண்கள் ஒளியையே இழந்துவிட்டது போலிருந்தன! ஒன்றும் தெரியவில்லை எனக்கு. சாலையின் ஓரமாக வந்துகொண்டிருந்த நான், ஒருகணம் அப்படியே நின்றுவிட்டேன்! உடல் சோர்வடைந்தது, உட்காரவேண்டும் போலிருந்தது. சாலையின் ஓரமாக இருந்த மரத்தில் அப்படியே சாய்ந்துகொண்டேன்.

"தென்னவர் நாடு இந்நிலையிலா தவிக்கவேண்டும்?" இந்தக் கேள்வி

---

*

ஒருவரை ஒருவர் கொள்ளையடிக்காத நட்புறவு, சாதி மதப் பிடிவாதங்களற்ற சுதந்தரமான வாழ்வு, செல்வச் செருக்கற்ற சரளமான மனப்போக்கு— இவையே உண்மை ஜனநாயகத்தின் அறிகுறிகள்.

*

என் மனதில் எழும்பிக்கொண்டிருந்தது.

சிறிது கழித்து என் கண்களை ஒரு முறை நன்றாகக் கசக்கிவிட்டுப் பார்த்தேன். இலேசாகப் பார்வை தெரிந்தது. எப்படியோ தட்டுத் தடுமாறிய படி இங்கு வந்து சேர்ந்துவிட்டேன்.

இப்போது, நான் கண்டவைகளையெல்லாம் எண்ணியெண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன்!

தன்னிகரில்லாமல் தென்னவர் வாழ்ந்தாரென்று சரித்திரம் கூறுகிறதே......ஆனால், இன்று அதற்கு நேர்மாறாகத் தரித்திரம்தான் வாழ்கிறது! இதை ஒழிக்க முடியாதா......? நம் நாடு செழிக்க வழியே இல்லையா...?

எவன் ஒருவன் தன்நாட்டுப் பற்றும், தன்னம்பிக்கையும் கொண்டு வாழ்கிறானோ... அவன்தான் மனிதன். அவனுக்கு நிகர் அவனேதான். இப்படி நம் நாட்டிலுள்ளவர்கள் ஒவ்வொருவரும் தம் நாட்டுப்பற்றும், தன்னம்பிக்கையும்கொண்டு வாழ்ந்தார்களானால், தரித்திரமென்ற பெயரையே நீ, கேட்கமுடியாது. இதுதான் நம்நாடு செழிக்க நான் சொல்லும் நல்ல வழி."

○

"கல்கி" தரும்

நற்சாட்சிப்பத்திரம்

தில்லி அரசு மாநில அரசுகளுடன் நடந்துகொள்ளும்போக்கு, "ஆண்டான் அடிமை" என்ற முறையில் இருந்து வருவதோடு, மாநில அரசுகளை மக்களாட்சி முறைக்குப் புறம்பாக நடத்தி வருகின்றது என்பதை, நாம், பல முறை, பல மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம். நாம் கூறுவதை மெய்ப்பிக்கும் வகையில் "கல்கி" இதழ் 13—11—60 விநோதத் தூதர் ஆலயங்கள் என்ற தலைப்பிட்டு ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது. அதன் ஒரு பகுதியை இங்கு தருகின்றோம்:-

"மத்தியப் பிரதேச சர்க்கார் புதுதில்லியிலே, நிரந்தரமான தூதராலயம் திறந்துவிட முடிவு செய்துவிட்டது. தூதராலயத் தலைவர், சிப்பந்திகள் அனைவரும் வசிப்பதற்கான வசதிகளுடன் கூடிய ஒரு கட்டிடத்தைக் கட்டத் தீர்மானித்திருக்கிறது. இராஜ்யத்தில் நடக்க வேண்டிய சில்லறைக் காரியங்களுக்கெல்லாம் அன்றாடம் தில்லிக்குச் சென்று வருவதைவிட, நிரந்தரமாக ஒரு காரியாலயத்தைத் தில்லியில் திறந்துவிட முடிவு செய்ததில் ஒன்றும் தவறில்லை.

இந்தியாவுக்கு வரும் வெளிநாடுகள்தான் தில்லியில் தூதராலயம் திறக்கும் வழக்கத்தைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு மாகாண சர்க்காரே புதுதில்லியில் ஒரு தூதராலயம் திறக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது என்றால், மத்திய சர்க்காரின் உடும்புப் பிடி இராஜ்ய சர்க்கார்களின்மீது எவ்வளவு கடுமையாக இருக்கிறது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

வர்த்தகத் துறையில் இருப்பவர்கள் லைசென்சு வாங்கவும், பர்மிட் வாங்கவும் தினப்படி தில்லியை நோக்கிப் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. தில்லிக்கு விமானம் மூலம் செல்வோரைக் கணக்கெடுத்தால், நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் கம்பெனிகளின் செலவில் தில்லி சர்க்கார் காரியாலயத்தை முற்றுகையிடுபவர்களாகவே இருப்பார்கள். பல கம்பெனிகள், தில்லியில் நிரந்தரமான கிளைக் காரியாலயங்களை வைத்துவிட்டன. சென்னையிலிருக்கும் ஒரு கம்பெனிக்கு ஒரு லைசென்சு வரவேண்டியிருந்தால், தில்லியிலிருக்கும் தனது ஏஜண்டுக்கு எழுதி, அவரை மத்திய சர்க்கார் காரியாலயத்தை முற்றுகையிடச் செய்து, காரியத்தைச் சாதித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

இந்தப் பரிதாப நிலை வர்த்தகத் துறையிலுள்ளவர்களுக்குத்தான் என்று இதுகாறும் நினைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு மத்தியப் பிரதேச சர்க்காரின் நடவடிக்கை நாட்டில் நிலவும் உண்மை நிலையை எடுத்துக்காட்டும்.

இராஜ்ய சர்க்கார்கள் நாளுக்குநாள் இரண்டாந்தர மூன்றாந்தர முனிசிபாலிடிகளைவிடக் கேவலமாகிவிட்டன என்பது இப்பொழுது உறுதியாகிவிட்டது. எல்லா அதிகாரங்களும் எல்லாச் செல்வாக்கும் மத்திய சர்க்காரிடமே குவிந்துவிட்டன. இராஜ்ய சர்க்கார் மந்திரிகளுக்கு அந்தஸ்தோ, அதிகாரமோ, உரிமையோ இல்லாமல் போய்விட்டன.

காந்தியடிகள் அதிகாரம் முழுதும் ஓர் இடத்தில் குவிந்திருக்கக்கூடாது, தேசம் முழுவதிலும் பரவியிருக்கவேண்டும், அந்தந்த இராஜ்ய மக்கள் அவரவர் விருப்பப்படி ஆண்டுகொள்ள உரிமையும் வாய்ப்பும் இருக்கவேண்டும் என்று சொல்லி வந்தார்.

ஆனால், நடைமுறையில் இதற்கு மாறுபட்ட செய்கையையே காண்கிறோம். எல்லா அதிகாரங்களும் மத்திய சர்க்காரிடக் குவிந்துகிடக்கின்றன!

சுதந்திரக் கட்சியினர் ராஜ்ய சர்க்காரின் இந்தப் பரிதாப நிலையையும், மத்திய சர்க்காரின் உடும்புப் பிடியையும் பற்றிக் குறை சொல்லிவந்தனர். ஆனால், இராஜ்ய சர்க்கார் மந்திரிகள் இதை மறுத்துவந்தார்கள். தாங்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்று, சர்வ வல்லமை பொருந்தியவர்களாயிருப்பதாகக்கூறிக் கொண்டு வந்தார்கள். காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் மத்தியப் பிரதேசத்தில் இம்மாதிரி நடவடிக்கை எடுத்துக்கொண்டது, சுதந்திரக் கட்சியினரும், மற்ற எதிர்க்கட்சிகளும் சொல்லுவது நூற்றுக்கு நூறு உண்மை என்பதைத் தெளிவாக்கிவிட்டது."

❋

உலகத்தின் அமைதியும் — உபதேசிகளின் கடமையும்!

கடலரசன்

உலகத்தின் அமைதியும் நல்வாழ்வும், வல்லரசுகளின் நட்பிலும் ஒற்றுமைப் பண்பிலும் தான் உள்ளன, என்பதைத் தரணியெங்கும் உள்ள தலைவர்கள் அனைவரும் தங்களின் சொல்லாலே விளக்கி வருகின்றனர். சென்ற திங்களில் உலக நாடுகளின் பிரதிநிதிகள் அனைவரும் சந்தித்துப் பேசிய ஐக்கிய நாட்டுச் சபை, உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் தீயசெயல் அனைத்தையும் களைந்து இன்பச் செய்திகள் பலவற்றைத் தரும் என்று எதிர்பார்த்தார்கள். அமைதிகாண விரும்பிய அவையில் அமளிகள் நடைபெற்றுவிட்டன. உலகத்தின் வேகமான சுழற்சியில், தன்னை மற்றவர் பின்தொடர முடியாத வகையில் உயர்ந்திருக்கின்ற அமெரிக்காவும், அந்த அமெரிக்காவை அவ்வி புகழ் நிலையிலேயிருந்து கீழே இறக்கிவிடத் துடிக்கின்ற ருஷ்யாவும் தங்களின் பலப்பரீட்சையினை விளம்பரப்படுத்தும் கூடமாகவே ஐக்கிய நாட்டு மன்றத்தின் சிறப்புக்கூட்டம் அமைந்துவிட்டது. சென்ற சில திங்களுக்கு முன்னாலே முற்றுப் பெறாமல் முறிந்துவிட்ட பாரிசு மாநாட்டுச் செய்திகளையெல்லாம் நினைவூட்டிக் குருசேவ், அமெரிக்காவின் ஆதிக்க வெறியினை தனக்கே உரிய முரட்டுக் குரலில் கண்டித்துக் காட்டினார். அதற்கு நேர் எதிரான பாணியில் அய்சனோவரும் மறுத்துப் பேசினார்.

உலகத்தின் அமைதியும் நல்வாழ்வும் குருசேவ்—அய்சனோவர் சந்திப்பிலும், அமெரிக்க—ருசிய இவைகளின் கொள்கைப் பரிமாற்றத்திலும்தான் உள்ளன, என்பதை அவையில் உரை நிகழ்த்திய எல்லா நாட்டு அங்கத்தினர்களும் மிகவும் உறுதியாக விளக்கினர். பண்டித நேருவும் அவரது சொல்லுக்கு மதிப்பு இருக்கும் என்று நம்பிய நாசர், நக்ருமா போன்றவர்களும் கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்துத் தோற்கடிக்கவும் நேருவின் சொல்லை அங்கே செல்லாக் காசாக்கவும் பல முயற்சிகள் நடைபெற்றன.

உலகத்தின் அமைதியையும் நல்வாழ்வையும் நாசப்படுத்தும் வகையில் பல்வேறு வகையான போர்மேகத் திவலைகள் கண்ணுக்குத் தெரிவதைத்தான் காங்கோ—கடங்கா நிலைமைகள் புலப்படுத்திக் காட்டின. ஐ.நா. மன்றத்தின் ஆணைக்கு அடங்க மறுத்திடும் படைத் தலைவன் சாம்பே லுமும்பாவை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டேன் என்று சொன்ன கசபாவு போன்றவர்கள் குழப்ப நிலையை மேலும் மேலும் அதிகப்படுத்தினார்கள்! இன்றளவும் அந்தக் குழப்பம் குறைந்தபாடில்லை முடிவையும் காணோம்! தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் இனவெறிப் போக்கினையும் உலகத் தலைவர்கள் விவாதித்தனர். இந்தியர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை இந்தியத் துணைக்கண்டப் பிரதமரும் மற்றவர்களும் எடுத்துரைத்த மொழிகளையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த தென்னாப்பிரிக்கப் பிரதாநர், தன்னுடைய பதிலுரையில் கோடியான தாக்குதலைத் தொடுத்தார்! தென்னிந்தியாவிலே உள்ள மக்கள் இந்தியப் பிரதமர் நேருவாலே அடக்கி ஆளப்படும்போது, அங்கே இன்னும் தீண்டாமைக் கொள்கை அனுமதிக்கப்படும்போது, தென்னாப்பிரிக்காவில் இனவெறி இருப்பதாகக் கண்டிப்பதில் உண்மையில்லை, வாதத்திலே வலிவில்லை என்று கடுமையான குரலில் பேசினார்!

உலகத்தின் அமைதியையும் நல்வாழ்வையும் விரும்புகின்ற எவரும் தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் அநீதிகளைக் கண்டிக்கத் தவறமாட்டார்கள். ஆனால் அந்தப் பிரதமர் எடுத்துக்காட்டியுள்ள குறைகளைக் களைந்திட இந்தியத் துணைக்கண்டப் பிரதமர் தவறிவிட்டார் என்பதையும், தென்னாட்டுத் தொழிலிலே, அரசியலிலே எதனைக் கணக்கிட்டாலும் காணமுடியும். ஆயுத ஒழிப்பினை மிகைப்படுத்திப் பேசியவர்களும், அணு ஆயுதங்களை ஒருவருக்கொருவர் போட்டியிட்டு உற்பத்தி செய்துகொண்டிருப்பவர்களும் தங்களைத் தாங்களே திருத்திக்கொள்ளாமல் தவறுகளைத்தான் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார்கள். எனவேதான் அங்கு பல்வேறு நாட்டுமக்களின் உரிமைகளைப்பற்றிய பேச்சுக்கள் உதட்டளவிலே நின்றுவிட்டன! கம்யூனிஸ்ட் சீனத்தைக் கணக்கிலே சேர்த்துக்கொள்வதைத் தங்களின் கண்ணியத்திற்கு இழைக்கப்படும் களங்கம்! என்றுதான் வல்லரசினர் கணித்து வைத்துள்ளனர். உலக நாடுகளின் அவையில் அறுபது கோடி மக்களின் பிரதிநிதியாக கம்யூனிஸ்ட் சீனா இடம் பெறுவதையும், பார்மோசாத் தீவிலே பதுங்கி நிற்கும் சியாங்கின் பிரதிநிதி அவையிலேயிருந்து அகற்றப்படுவதையும், குருசேவ் விரும்பினார், நேரு உள்பட பலரும் விரும்பிச் சொல்லோவியம் தந்தனர்!

உலகத்தின் அமைதியைக் காத்திடக் கம்யூனிஸ்டுகள் லாயக்கற்றவர்கள் என்று அமெரிக்கப் பிரதிநிதி பல சான்றுகளைக் காட்டிப் பேசினார். குறைந்த நேரமே பேசிய அமெரிக்க நாட்டு அதிபர் அய்சனோவரும், பிரிட்டனுடைய பிரதமர் மாக்மில்லனும் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்திக் காட்டினார்கள்! அந்தப் பலத்தைக்கொண்டே அர்ஜெண்டைனாவின் தீர்மானத்தை ஆதரித்துக்காட்டி, நேருவைத் தாழ்த்தினார்கள்!

எனவேதான், இத் துணைக்கண்டத்துப் பிரதமர் உள்நாட்டுக் குழப்பத்தை நீக்கி, இங்கே எழுந்துவிட்ட மக்களின் இனப்பற்றுதலை மதித்து உலகத்துக்கு உபதேசம் செய்யப் புறப்படுவது நல்லதென நினைவூட்ட விரும்புகிறோம்!

"வஞ்சிக்கப்பட்டவர்கள்"

வேலை—மாலவன்

அறியாமை இருள் முற்றும் விலகாவிட்டாலும்கூட, சாதி என்னும் இருள் முற்றும் விலகாவிட்டாலும்கூட; இவ்வுலகைச் சூழ்ந்திருந்த காரிருள் மட்டும் விலகியது என்றும்போல்.

"அடிமைப்பட்டிருக்கும் நம் நாட்டை மீட்டுத் தனியரசாகத் திகழச் செய்யவேண்டும்" எனத் துடிக்கும் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றத்தான் துணிவில்லை என்றால், இன்னும் படுக்கையை விட்டு எழுந்திடவா துணிவில்லை? எனக் கேட்பதுபோல் எழுந்தது ஞாயிறு.

நானும் எழுந்தேன்—நடந்தேன், ஆற்றை நோக்கி. எனக்கு முன்பே சென்று குளித்துவிட்டுத் திரும்பியவர் "ஏது இன்றைக்கு இவ்வளவு நேரம் இப்பொழுதுதான் வருகிறாயா?" என்று கேட்டுக்கொண்டே நடந்துகொண்டிருந்தனர். "ஆம் கொஞ்சம் நேரமாகிவிட்டது இப்பொழுதுதான் வருகிறேன்" என்று கூறிக்கொண்டே நானும் நடந்துகொண்டிருந்தேன்.

இந்த அவசியமற்ற கேள்வியும் பொருளற்ற பதிலும் என்றும் நடக்கும் நிகழ்ச்சியே. எனவே அதைப்பற்றி அக்கறை காட்டாமல் ஆற்றை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது என்றும் இல்லாத காட்சி ஒன்று தென்பட்டது.

அழகின் இருப்பிடமாக— அமைதியின் பிறப்பிடமாக விளங்கும் எங்கள் ஊர் ஆற்றங்கரை, என்றும்போல் இல்லாமல் சற்று அமைதியிழந்து, ஆரவாரத்துடன் காணப்பட்டது.

ஆற்றுமேட்டில் ஒரு கூட்டமே கூடிநின்று, எதையோ பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது. என்னவாக இருக்கும் என்று பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தால் என்னையும் மீறிச் சற்று வேகமாகவே நடந்தேன். அதற்குள், அங்கிருந்து வந்த நண்பனொருவன், நான் கேட்காமலே, என்னை இழுத்துப் பிடித்து நிறுத்திக்கூற ஆரம்பித்தான். அவன் பார்த்துவிட்டு வந்ததை, மற்றவர்களுக்குக் கூறுவதில் அவ்வளவு ஆர்வம் அவனுக்கு.

"யாரோ இருவர் காதலில் தோல்வியுற்றவர்கள்போலிருக்கிறது. தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். அதைப்பார்க்கத்தான் இவ்வளவு கூட்டமும்" கூறிமுடித்துவிட்டுப் போய்விட்டான், அவன். ஏனென்றால் மற்றவர்களுக்கும் கூறவேண்டுமல்லவா? ஆற்றங்கரையில் இறந்து கிடக்கிறார்கள், என்றாலே தற்கொலை செய்துகொண்டவர்களாகத்தானிருக்கும். அதுவும், வறுமையின் கொடுமைக்குப் பலியானவர்களாகவோ — காதலிலே தோல்வி கண்டவர்களாகவோதான் இருக்கும்.

ஏனென்றால், தற்கொலைசெய்துகொள்ளும் நிலை இந்த இருபிரிவினருக்கு / மட்டும்தானே உரிமையாக்கப்பட்டிருக்கிறது இந்த நாட்டில்.

நானும் கூட்டத்தை விலக்கிக்கொண்டு அங்கு பிணமாகக்கிடந்த இருவரையும் பார்த்தேன். பார்த்தவுடன், யார் வீட்டுக் குழந்தையோ விபத்தில் சிக்கிக்கொண்டது எனக்கேள்விப்பட்டு வேடிக்கை பார்க்கவந்த இடத்தில் விபத்திற்குள்ளானது தன் குழந்தைதான் என்றறிந்த தந்தையின் நிலை ஏற்பட்டது எனக்கு. அங்கே பிணமாகக்கிடந்தவர் இருவர். ஒன்று பெண், அறிமுகமில்லாதவள். ஒன்று ஆண். அந்த ஆண் எனது நண்பன். அப்படியானால் அவன் அருகில்கிடந்தவள் அவன் காதலியாகத்தான் இருக்கும்.

இவர்கள் இங்கே எப்படி வந்தனர். ஏன் இந்நிலை வந்தது? என்பது புரியாமல் திகைத்தேன். யாரிடமாவது கேட்கலாம் என்றால், அங்கே எனக்குப் பதில்சொல்ல யார் இருக்கிறார்கள்? அத்தனை பேரும் இறந்துகிடந்தவர்களைப் பற்றிய விமர்சனத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அழுகை — ஆத்திரம் — அனுதாபம் — அலட்சியம் — ஆணவம் ஆகிய அனைத்தும் அந்த இடத்தில் அரங்கேறின. ஆனால் அவர்களைப்பற்றிய விளக்கத்தை மட்டும் காணவில்லை.

சிறிது நேரத்தில் ஊர்க் காவலர் வந்தனர். கிராம அதிகாரி வந்தார். விசாரணை நடைபெற்றது. விசாரணையில் தெரிந்துகொண்டது ஒன்றே ஒன்றுதான். அதுவும் பரிசல்காரச் செல்லப்பனிடமிருந்து. என்றும்போல அதிகாலையில் பரிசல் துறைக்கு வந்தபொழுது, கரையோரத்தில் இந்த இரு உருவங்களும் கிடந்ததாகவும், உயிர் இருக்குமோ என்ற சந்தேகத்தில் எடுத்துக் கரையில் போட்டதாகவும் கூறினான். வேறு

தகவல் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், அவர்கள் இருவரும் பக்கத்து ஊர்தான் என்பது மட்டும் எல்லோருக்கும் தெரிந்திருந்தது. முடிவில், "தற்கொலை" என்று பஞ்சாயத்தாரால் முடிவு செய்யப்பட்டது. அவர்களுடைய ஊருக்கும் செய்தி அறிவிக்கப்பட்டது. அந்த இரு உடல்களும் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டன.

அத்துடன், அங்கிருந்த கூட்டமும் கலைக்கப்பட்டது. எல்லோரும் சென்ற பிறகு நானும் குளித்துவிட்டு வீடு வந்தேன். ஆனால், என் நினைவு அவர்களைச் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருந்தது. இறந்துபோன அந்த நண்பன், எனது பக்கத்து ஊரைச் சேர்ந்தவன். சீர்திருத்த நோக்கம் கொண்டவன். நானும் அவனும் நண்பர்களானதே இயக்கத்தினால்தான். அதுவும் எங்கள் வட்டத்தில் நடைபெறுகின்ற கூட்டத்திற்குச் சென்று வருவதின் மூலம் அறிமுகமானவர்கள். அதன் பிறகு, மாலை நேரங்களில் உலாவச் செல்லும்பொழுது நான், அவனுடைய ஊரை நோக்கிச் செல்வேன். அவன் என் ஊரை நோக்கி வருவான். எங்கள் இரு ஊர்களுக்கிடையில் சாலையின் குறுக்கே ஒரு சிறிய பாலம், ஒன்று இருக்கிறது. அந்த இடத்தில் சந்தித்து அந்தப் பாலத்தின்மீது உட்கார்ந்துகொண்டே நீண்ட நேரம் பேசிக்கொண்டேயிருப்போம். அப்பொழுது ஒரு முறை தன் காதலியைப்பற்றிக் கூறியிருக்கிறான். ஆனால் முழு விவரங்களையும் கூறவில்லை. விரைவில் தனக்குத் திருமணம்—சீர்திருத்த — கலப்புத் திருமணம் நடைபெறும் என்று மிக ஆர்வத்துடன் கூறினான். நானும் அவனுடைய நோக்கத்தை ஆதரித்து வாழ்த்துத் தெரிவித்துவிட்டு வந்தேன். அதன் பிறகு நாங்கள் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. பிறகு ஒரு நாள் சந்தித்தபொழுது, "நான் வெளியூர் சென்று வாழவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்" என்று கூறினான். அதன் பிறகு இன்றுதான் —பிணமாகக் கிடந்த நிலையில் சந்தித்தேன். அவனைப்பற்றிய செய்தியை முழுதும் அறியவில்லையானால் என் கவனம் வேறு எதிலும் செல்லாது என்றறிந்தேன். அவனுடைய ஊரில் சென்று அவனைப்பற்றித் தெரிந்துவரப் புறப்பட்டேன். அவனுடைய ஊரில், உள்ளூர் "வானொலி" நிலையம் என மதிக்கப்படும் ஊர்ச் சாவடியில், அவனையும் —அவளையும்பற்றித்தான் ஒலிபரப்பிக்கொண்டிருந்தார்கள். உள்ளூர் அச்சேறாத 'செய்தித் தாள்கள்' சில, 'அவனையும்—அவளையும்' பற்றிய செய்திகளைத்தான் வெளியிட்டுக்கொண்டிருந்தன. பொதுவாக அந்த ஊரில், அங்கு இங்கு என்றில்லாமல் எங்குமே 'அவனையும்—அவளையும்' பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். இருந்தும்கூட, அவர்களைப்பற்றிய முழுச் செய்தியும் கிடைக்கவில்லை. வேறொரு நண்பனின் வீட்டிற்குச் சென்று வந்திருக்கும் வேலையைக் கூறினேன். அவனும் கூறினான். அவன் கூறியது இதுதான்: "இறந்துபோன நண்பனின் காதலி ஒரு பெரிய இடத்துப் பெண். ஆனால், விதவை. அவளுக்கு வசதியிருந்தது — வாய்ப்பு இருந்தது அதோடு வயதும் இருந்தது. ஆகவே, வாழவேண்டும் என்ற எண்ணமுமிருந்தது. அவள் வாழ விரும்பினாள்—அவன் வாழ்வு தர விரும்பினான். எனவே இருவரும் இணைந்து வாழ ஏற்பாடுகள் செய்தனர். இதை, உற்றார் பொறுப்பார்களா? உறவினர் ஏற்பார்களா? இல்லை, ஊரார்தான் சும்மா இருப்பார்களா? எதிர்ப்புகள் தெரிவித்தனர், இடையூறுகள் விளைவித்தனர். ஆனால்; ஏழ்மையில் பிறந்து, ஏமாற்றங்களில் வளர்ந்து, எதிர்ப்புகளுக்கிடையில் வாழ்ந்துவரும் அவனோ, எதிர்ப்புகளைத் தாங்கிப் பழகிப்போன மனமும், எதையும் சமாளிக்கப் போதுமான பணமும் கொண்ட அவளோ எதைக் கண்டும் அஞ்சாமல், வெளியூரில் சென்று தங்கள் இன்ப வாழ்வைத் துவங்கத் திட்டமிட்டுச் செயலாற்றினர். அதற்குள் அவளுக்காகவும், அவளுடைய பணத்திற்காகவும் — உறவினர் என்ற பெயரில் காத்திருந்த சில வஞ்சகர்களால் — சதிகாரர்களால் வஞ்சிக்கப்பட்டுவிட்டனர்.

அவன் கூறிமுடித்தான். நான் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டேன். இறந்துபோன 'அவர்கள்' இருவரும், சதிகாரர்களால் மட்டுமல்ல, சாட்சிகளை வைத்தே நீதி வழங்கிவிடும் சட்டத்தாலும்—எத்தனையோ தவறைச் செய்தவர்கள், குற்றங்கள் புரிந்துகொண்டிருப்பவர்கள் எல்லோரையும் 'என்னைவிட நல்லவர்கள் ஊரில் இல்லை; எனக்கு நிகர் வேறு யாருமில்லை.' என இறுமாப்புடன் உலவிக்கொண்டிருக்க விட்டிருக்கும், இந்தச் சமுதாயத்தாலும்கூட, வஞ்சிக்கப்பட்டவர்களே.

★

தலைமை நிலைய அறிக்கை (அ) 10/60

வாக்குரிமை பற்றிய விளக்கம்

கீழ் அமைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இல்லாமல், சாதாரண உறுப்பினர்த் தகுதியிலேயே முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்ட (சென்னையில் பகுதிக் கழக), மாவட்ட, மாநில அமைப்புக் குழுக்களின் அலுவலாளர்களான அவைத் தலைவர், செயலாளர் (மாநில அமைப்பாளர்), துணைச்செயலாளர் (துணை அமைப்பாளர்), பொருளாளர் ஆகியோர், குறிப்பிட்ட அமைப்பின் அலுவலாளர்கள் என்ற தகுதியிலேயே அந்தந்த அமைப்பில் நடைபெறும் தேர்தல்கள், மற்றும் வாக்கெடுப்புக்குள்ளாகும் பிரச்சினைகள் ஆகியவற்றில் கலந்துகொண்டு வாக்களிக்க உரிமை பெற்றவராவார்கள்.

'அறிவகம்', சென்னை-13
16—11—1960

என். வி. நடராசன்,
அமைப்புச் செயலாளர்.

புதிய பாதை!

"நான் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து, எப்படியோ கல்லூரியிற் சேர்ந்து படிக்க நேர்ந்ததால் ஏற்பட்ட காதல், உன்னை மணக்கும்படி செய்துவிட்டதென்று நீ கருதக்கூடும். ஆனால், நான் அந்தக் காதலுக்கு ஆளாகி உன்னைத் திருமணம் செய்துகொள்ளவில்லை. உன் போன்ற பணக்கார வீட்டுப் பெண்களை நல்லவழிக்கு கொண்டு வரலாம் என்ற இலட்சியத்தோடு தான் உன் காதலுக்கு இசைவு தந்தேன். அதை மனதில் பதியவைத்துக் கொண்டு நான் கூறுவதைக் கேள்"

ஏழை வீட்டுப் பெண்கள், நாளை அடுப்புப் புகைவதற்கு என்ன வழி என்ற கவலையில் இருப்பர்! பணக்கார வீட்டுப் பெண்கள், பட்டுச் சேலை என்னகலரில் எடுக்கலாம், மாங்காய் மாலையை அழித்து இரண்டு வடத்தில் தங்கச் செயினாகச் செய்து போடலாமா, அல்லது நெக்லசாக மாற்றலாமா என்பன போன்ற கவலையில் மிதப்பர்!

இது பணக்கார வீட்டுப் பெண்களின் நிலை. ஆனால்......,

"அம்மா! தாயே!! எங்கள் குடிசை மழையில்கரைந்து சொட்டுகிறது! சுவரெல்லாம் மழைநீர் பட்டுக்கரைந்துவிட்டது! இத்தனை அரண்மனைபோல் இருக்கும் இந்தத் தெருவில் உள்ள வீட்டுக்காரர்கள் யாரும் தங்குவதற்கு அனுமதி தர மறுக்கிறார்கள் அம்மா! தாங்கள் தான் பெரியமனம் வைத்து மழை விடும்வரை, இந்த இரவு மட்டும், இந்தப் பச்சிளம் சிசுவோடு தங்குவதற்குக்கொஞ்சம் இடம்தரவேண்டும்! — என்று கேட்டாளே! எதிர் வீட்டுக் குடிசைக்காரி! பிள்ளையும் கையுமா கெஞ்சி அழுதாளே! அந்த ஏழைக்கு நீ தந்த பதில் என்ன?"

"பதில் வேறு அதுகளுக்கு சொல்ல வேண்டுமோ! அந்தப் பஞ்சைகள் தங்குவதற்கு என்வீடு ஒன்றும் மாட்டுக்கொட்டகை அல்ல!"

"அத்தனை கேவலமாகப் போய் விட்டார்களா உனக்கு? அவர்கள் இல்லை என்றால் தெரியும் உன் பவிசு! இத்தனை உரிமையோடு சொந்தம் கொண்டாடுகிறாயே, என் வீடு என்று— அந்த ஏழைகள் முதுகு வளையக்கட்டித்தந்தது என்பது நினைவிலிருக்கட்டும்! இத்தனை

*** ஆர். வி. ***

சொகுசாகக் கட்டிலில்சாய்ந்திருக்கிறாயே, இதனைச் செய்தவன் ஒரு ஏழைதான் என்பதைத் தெரிந்து கொள்! பளபளக்கும் பட்டுச் சேலை எனக்கு எப்படி அத்தான் இருக்கிறது என்று கேட்டு அணிந்து கொள்வாயே — அதனை மூட்டு எலும்பு தேய நெய்து தந்தவன் ஏழை நெசவாளி என்பதை எண்ணிப்பார்! மூக்கிலே வைரமாய், கழுத்திலே தங்கமாய்க் காட்சி தருகிறாயே அழகு தேவதையாய்— இவைகள் எல்லாம் பஞ்சைகளால் வந்தவை என்பதை மறவாதே!"

"தாங்கள் பேசிய இந்த வசனங்கள் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போனவை! தாங்கள் எழுதுகிறீர்களே பத்திரிகை என்று—அவைகளுக்கு எழுதி அனுப்புங்கள் இந்த ஒப்பாரிகளை!"

"இவைகள் ஒப்பாரிகளா உனக்கு? புத்த பகவானிலிருந்து இன்றுள்ள நல்ல அறிவாளிகள் வரை இந்த ஒப்பாரிகளை நிறுத்தத்தான் — அரிய கருத்துக்களை வழங்கி வருகின்றார்கள்! வழிபல வகுத்துத் தருகின்றார்கள்! ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதற்கென்றே அரச பாதையிலிருந்து ஏழைகள் குடிசை நோக்கிப் புதிய பாதை அமைத்தார் புத்தர்!

ஆனால், ஒன்று சொல்கிறேன்— நீ கேலிபுரிவதுபோல் குற்றால அருவியைக் காட்டி, அங்கு கொஞ்சி விளையாடும் காதலர்களைக் காட்ட எனக்குத் தெரியாது! வைரத்தைக் காட்டி அதற்கு வணங்கும் வனிதையரைப்பற்றிய விவரம் எனக்குப்புரியாது! குடிசைகள் தெரியும்! அங்கு வாடும் ஏழைகள் தெரியும்! தொழிலாளிகளை அறிவேன்! அவர்கள்படும் தொல்லைகள் அறிவேன்! பசிக் கொடுமை எப்படி இருக்கும்? அதனால் உள்ளத்தில் ஏற்படும் விபரீத எண்ணங்கள் யாவை? என்பன அறிவேன்! கேடிலாக் தெரியாது! கொள்ளையற்றவர்களின் எத்துகள் புரியும்! உல்லாசிகளின் சொர்க்க போகத்தை வர்ணிக்க முடியாது என் சிந்தனை! அவர்கள் செய்யும் சூதுகளை மூச்சந்திக்குக் கொண்டுவரத்தெரியும்!"

"இத்தனை பெரிதாகத் தொழிலாளி, ஏழை என்று பேசுகிறீர்களே,—எந்தத் தொழிலாளி கூலி பெறாமல் வேலை செய்கிறான்."

நல்லதுதானே!

இத் துணைக்கண்டத்துக்குத் தேவைப்படுவதாக எண்ணி வகுக்கப்பட்ட அரசியல் சட்டங்கள் பல, திருத்தியமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நாடெங்கணும் இருந்து வருகிறது.

* * *

ஆனால், அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டிருக்கும் சில அடிப்படை உரிமைகள் பொதுமக்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்று கேரள கவர்னர் கிரி அவர்கள் கூறுகிறார். இதற்குக் காரணம் என்ன என்பதையும் அவரே எடுத்து விளக்கியுள்ளார்.

1. உரிமைகளைப் பெற உழைப்பு வேண்டும்.
2. மதி நுட்பம் வேண்டும்.
3. நாட்டைச் சரியாக நிர்வகிப்பதற்கு வேண்டிய ஆற்றல் வேண்டும்.

இப்போது நாட்டை நிர்வகிப்பவர்களிடம் போதுமான அளவுக்கு அதற்குரிய ஆற்றல் இருக்கிறதா இல்லையா என்பதை அறியவும்; அறிவுரை கூறவும் நாட்டை நிர்வகிப்பவர்களின் கட்சியிலேயே அநேகர் இருப்பதைக் காண நமக்கு மகிழ்ச்சி உண்டாகிறது.

இப்படிப்பட்ட குற்றங்களையும் குறைகளையும் எடுத்துக்காட்டித் திருத்தவும் மாற்றவும் எதிர்க்கட்சியிலிருப்பவர்களைவிட அவர்கள் கட்சியிலேயே ஆட்கள் உருவாகும் நிலை ஏற்படுவது நல்லதுதானே! இதனை ஒரு நல்ல அறிகுறியென்றே சொல்லவேண்டும்.

"அந்த ஏழைகளுக்கு வயிறு என்று ஒன்று இல்லாவிட்டால்—இந்த கூலியைக்கூடக் கொடுக்க மனம் வராதே பணக்காரர்களுக்கு!"

"அவர்களும் பணக்காரர்களாக வரட்டுமே! யார் வேண்டாம் என்று தடுத்தார்கள்!"

"நாம் பணக்காரர்களாக ஆக வேண்டும்—என்று ஏழைகளுக்கு மட்டும் ஆசை இராது என்பது உன் எண்ணமா!"

"ஆசை இருந்தால் மட்டும் போதுமா? முயற்சி வேண்டுமே!"

"எப்படி முயற்சி செய்யச் சொல்கிறாய்?"

"பாடுபட்டு உழைக்கவேண்டும்!"

"பாடுபட்டு உழைத்துத்தான்—பசித்த வயிறோடு பட்டினி கிடக்கிறீன ஏழை!"

"ஏதோ ஒன்று! பணக்காரன் ஆகவேண்டுமானால் இப்படி எல்லாம் செய்தால்தான் முடியும்!"

"அதனால்தான் சொல்கிறேன், ஏழையை எத்தி அவன் எலும்பின் தேய்விலே வாங்கிய பட்டம்தான் பணக்காரன் என்பது. இது துரோகமில்லையா?"

"உங்கள் கணக்குப்படி பணம் படைத்தவர்கள் எல்லாம், எத்தர்கள்—துரோகிகள்—என்று சொல்லுங்கள்!"

"ஒருவன் தன் சுயபலத்தால் பொருள் ஈட்டிச் சேமித்தால் அது சாமர்த்தியம்! ஒருவன் பலர் உழைப்பிலே கொழுக்கிறானே—அது துரோகம்! ஒருவனால் தன் சுய உழைப்பிலே வேலைசெய்து பணக்காரனாக முடியாது! அதனால்தான் சொல்கிறேன் பணக்காரர்களுக்கு வாழ்வு அமைத்து தந்தது ஏழைகள் என்று!"

"பலர் உழைப்பில், எதிர் வீட்டுக் குடிசைக்காரியைச் சேர்த்து சொல்கிறேன்—அவள் போன்றவர்களால் கட்டப்பட்டு எழுந்து உயர்ந்ததுதான் நீ இன்பமாய் வாழும் இந்த கட்டிடம்! ஒரு செங்கல்லைக்கூடத் தொட்டுப் பாராத உனக்கு வாழும் உரிமை! எப்படி கிடைத்தது இந்த உரிமை? குடிசைக்காரி இங்கு ஒரு நாள் தங்குகிறேன் என்று கெஞ்சி அழுதாளே—அவள் தங்கினால் இந்தக் கட்டிடம் இடிந்தா விழுந்துவிடும்! இந்தக் கட்டிடம் கட்டுகையில் சாரத்தில் பிள்ளையும் வயிறுமாய் ஏறி இறங்கினாளே அந்த ஏழை—அந்தக் காட்சி உனக்குத் தெரியுமா? உரிமை என்ற பெயரால் உதவி கேட்டவளை எட்டி உதைத்தாய்!"

"தெரியாமல் குடிசைக்காரியை விரட்டி அடித்தேன்! அவளுக்கு இடம் கொடுக்காதது என் தவறுதான். என்னை மன்னித்துவிடுங்கள்!"

"உன்னை மன்னிக்க நான் யார்? உன்னைப் போன்ற பணக்காரர்களை மன்னிக்க உலகம் பக்குவப்பட்டுக் கொண்டு வருகிறது. ஏழைகளுக்கு பணக்காரர்களின் சூதுகள் தெரிய ஆரம்பித்துவிட்டது! எல்லோருமே வாழவேண்டும் என்ற எண்ணம் நல்லவர்களின் இதயங்களில் குடி புகுந்துவிட்டது! இந்த வளர்ச்சியே பணம் படைத்தோருக்கு எழுப்பும் கல்லறை!

இனி வரும் தலைமுறைகளில் பணத்திற்கு மதிப்பு இராது! இப்பொழுது உள்ளதுபோல் ஏழைக்குக் கஞ்சியும், எத்தவனுக்கு பருப்புச் சோறும் என்ற பாகுபாடு இருக்காது! அறிவால், பொதுத் தொண்டால், ஏழையர், பணக்காரர்—என்ற நிலை மாறும். அறிவும், நல்ல நெஞ்சும், பொதுத் தொண்டும் உடையவன் எவனோ அவன்தான் மனிதன் என்று மதிக்கப்படுவான்.

உனக்கு ஒரு வேலையைச் செய்யச் சொல்லவே ஓடிவந்தேன்! ஏதேதோ பேசுகிறேன்! நீ இப்பொழுது குற்றவாளி! இரண்டு உயிர்களைக் கொன்ற கொலைகாரி!"

"என்ன விபரீதமாக ஏதேதோ பேசுகிறீர்கள்!"

"நீ, இன்று மாலை, இடம் கொடுக்க மறுத்து வெளியே விரட்டினாயே குடிசைக்காரியை! இப்பொழுது அவள் என்ன ஆனாள் என்று உனக்குத் தெரியுமா? சுவர் விழுந்து தாயும், சேயும் செத்துவிட்டார்கள் அம்மணி! செத்துவிட்டார்கள்!"

"என்னைக் கொல்லாதீர்கள்! என் வாழ்க்கையில், குடிசையின் நிலை நான் கண்டதில்லை! அங்கே வசதியின்றித் துடிக்கும் ஏழையைப் பார்த்ததில்லை! பணத்தில் வளர்ந்தவள் நான்! பாறையாகிவிட்டது என் நெஞ்சம்! என்னை மன்னியுங்கள்! தாங்கள் நடக்கும் பாதையே இனி எனக்குப் புதிய பாதை!

★

வெளியீடு

கனகு

"என்னங்க, குழம்புக்குக் காய் ஒண்ணுமில்லே! மணி பதினொண்ணுக்கு மேலே ஆயிடிச்சி. இனி எப்போ போயி, எப்போ நீங்க காய் வாங்கிகிட்டு வர்றது? எப்போ சமையல் ஆகிறது? எப்போ.....!" என்று உள்ளறையிலிருந்து வாயில் பக்கம் தலையை நீட்டிக்கொண்டு, திண்ணையைப் பார்த்துக் குரல் கொடுத்தாள் வடிவுடை நாயகி. இது மூன்றாவது தடவை, இப்படி அவள் குரல் கொடுப்பது. அந்த மூன்று தடவைகளுக்கும் திண்ணையிலிருந்து பதிலையே காணோம். சற்று நேரம் அப்படியே நின்று பார்த்தாள் அவள். பிறகு வெளியில் வந்து திண்ணையை உரசிக்கொண்டு நின்றாள். 'என்னங்கோ!' என்று பலங்கொண்ட மட்டும் உரத்துக் கத்தினாள் — திண்ணையிலிருந்த பேராசிரியன் காதருகிற் சென்று.

அந்த இடி குரல் கேட்டுப் பேராசிரியர் திகைத்துத் திரும்பினார். நிமிர்ந்து பார்த்தார். "என்ன இது? — வேடிக்கையா, விளையாட்டா, கேலியா? இல்லை வம்புதானா?"

"அந்த வக்கணைக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை! உங்களுக்குத் தான் வார்த்தை தெரியுமென்று, ஒன்று கேட்டால் ஒன்பது அடுக்கிக்கொண்டு போனால் போதுமா?"

"நான் வக்கணை பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு, நீ அளவுக்கு மீறிக் காட்டுக்கூச்சல் போடுவதை மறந்து விட்டாயே! — அது கிடக்கட்டும். இப்போது ஏன் என்னை அழைத்தாய்?"

கையிலிருந்த புறநானூற்றுச் சுவடியைக் கீழே வைத்தார் பேராசிரியர் மருதமலையனார். அவர் வாய்தான் தம் இல்லக் கிழத்தியோடு பேசிற்று. உள்ளம் அவர் ஆய்ந்து கொண்டிருந்த புறநானூற்றுச் செய்யுளின் கருத்தை வளையமிட்டுக்கொண்டு கிடந்தது.

"மணி $11\frac{1}{2}$ ஆகிவிட்டது. விரைவாய்ப் போய் காய் வாங்கிக்கொண்டு வாருங்கள்!" கூச்சல் குறைந்து இழைந்த குரலிற் கூறினாள்—இப்போது வடிவுடைநாயகி.

விடுமுறை நாட்களில் மருதமலையனார் வழக்கமாகச் செய்யும் கடமைகளில் ஒன்று, காய் வாங்கிக் கொண்டு வரும் வேலை. இன்று அவருக்குத் திண்ணையைவிட்டு இறங்கவே மனம் வரவில்லை. தாம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் ஒரு கட்டத்தை அன்று முடித்துவிட வேண்டும் என்ற முனைப்பு இன்னும் அப்படியே இருந்தது. அதை அரைகுறையாக விட்டுவிட்டு வந்தால் எத்தனை அருமையான கருத்துக்கள் விடுபட்டுப் போகுமோ!

"பையன்கள் யாருமில்லையா? இன்றுமட்டும் யாரையாவது அனுப்பி. வாங்கிவரச் சொல்லிவிடேன்!"

வேண்டுகோள் விடுத்தார் பேராசிரியர்.

"பையன் யாரும் இல்லை. நீங்கள் போகாவிட்டால், ஒன்று சமையல் செய்யாமல் இருக்கவேண்டும். அல்லது நான் போய்விட்டு வரவேண்டும். நானே போய்வந்து விடட்டுமா?"

உடனே பதில் சொல்லவில்லை மருதமலையனார். அதற்குள் அவர்தம் துணைவியார் உள்ளே போய், கைக்கூடையை எடுத்துக்கொண்டுவந்து, வெளியில் கிளம்பி, வாயிலைத் தாண்டிப் போய் விட்டாள்.

வடிவுடைநாயகி இந்நாள்வரை ஒருநாள்கூடக் காய்கறிக் கடைக்குப்போய் வந்தது கிடையாது. அவள் அப்படிப் போவது தவறு என்றும் அவர் கருதவில்லை. என்றாலும், எந்நாளும் இல்லாத திருநாளாக இன்றுமட்டும் அவளைக் காய்கறிக் கடைக்கு அனுப்பிவைப்பது அவருக்கு ஏனோ உடன்பாடு இல்லை.

"இல்லை, இல்லை. இதோ நான் போய்வந்து விடுகிறேன்" கீழே வைத்த புறநானூற்றுச் சுவடியைக் கையில் எடுத்துக்கொண்டு திண்ணையைவிட்டுஎழுந்தார் மருதமலையனார்.

"இல்லை,நானே போய்விட்டு வருகிறேன்" என்று வடிவுடைநாயகி நடந்தாள்.

பேராசிரியர் புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, ஓடிப்போய் அவளை மறித்து நிறுத்தவேண்டியதாயிற்று.

அவர் கூடையை வாங்கிக்கொண்டார். "சில்லறையைக் கொடு" என்று கையை நீட்டினார். வடிவுடைநாயகி குபுக் என்று சிரித்துவிட்டாள். மருதமலையனாரும் சிரித்துவிட்டார். இருவரும் சேர்ந்து சிரித்த சிரிப்பு, உண்மையில் வேடிக்கையான சிரிப்புத்தான்.

சில்லறை இல்லாமலே வடிவுடைநாயகி காய் வாங்கக் கிளம்பி இருக்கிறாள். உண்மையாகக் கிளம்பியிருந்தால்தானே!

"என்னிடம் சில்லறை இல்லையே!"

"என்னிடம் சில்லறையும் இல்லை; நோட்டும் இல்லையே!"

இருவரும் கூறிக்கொண்டார்கள். இல்லாமையிற்கூட ஒரு வேடிக்கையும், நளினமும்! அந்த நளினம் இல்லை என்றால் அவர்கள் வாழ்வே இல்லையே!

வடிவுடைநாயகி வீட்டுக்குள் போனாள். எதை எதையோ துரு

வித் துழாவி ஒருநாலணா கொண்டு வந்தாள்.

"நாலணா போதுமா காய் வாங்க?"

"வேறு என்ன செய்வது? இந்த வேளைக்கு இதைக்கொண்டு பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்"

"அடுத்த வேளைக்கு......?"

"அதுவா, அப்போது பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். வேறு வழி இல்லையே!"

துண்டை எடுத்துப் போட்டுக்கொண்டு கிளம்ப ஆயத்தமானார் மருதமலையனார். 'நாலணாக் காய் வாங்க இவ்வளவு பெரிய கூடையா?' என்று தமக்குள்கூறிக்கொண்டு, கையில் எடுத்த கூடையைக் கீழேபோட்டுவிட்டுக், கிழிந்துபோன பை ஒன்றை எடுத்துக்கொண்டு கிளம்பினார்.

கால்கள்பாட்டிற்கு காய்கறி அங்காடியை நோக்கி நடந்தன. உள்ளம் அரைகுறை ஆராய்ச்சியோடு விட்டுவிட்ட புறநானூற்றுச் செய்யுளைச் சுற்றிச் சுற்றி வந்தது.

வாழ்க்கையில் வறுமையும், தோற்றத்தில் எளிமையும் உடைய மருதமலையனார் அக்கம் பக்கத்தார்க்கு ஒரு சாமானிய ஆசிரியர். படித்தோர், படிக்காதார், அறிவு மிகவுள்ளார், அது இல்லாதார், வாழ்க்கையின் உயர்ந்தமேட்டில் இருப்போர், அதன் தாழ்ந்த பள்ளத்திற்கிடப்போர் ஆகப் பலர் அவரை வாழ்க்கைக் கண்கொண்டு நோக்கினர். அது அவரை நல்கூர்ந்தார் பட்டியலில் சேர்த்து வைத்திருந்தது. மிகச் சிலர் அவரை அறிவுக்கண்ணோடு நோக்கினர். அது அவரை நல்லறிஞர் என்ற பீடமேற்றி வைத்திருந்தது. முன்னதைப் போன்றதுதான் பின்னதும்;—வெறும் பெயரோடு சரி. தமிழ் கூறும் நல்லுலகு முழுதும் அவரை அறிந்திருந்தது. அவர் யாத்த பல நூல்கள் அவர் பெயரை நாடெங்கணும் பரப்பி இருந்தன. அவையும் அவர் மாட்டு வெறும் பெயர் வாங்கித் தந்ததோடு சரி. மற்றவற்றின் உரிமைகளை எல்லாம் அந்நூல்களை வெளியிடுவோர் எப்போதோ வாங்கிக்கொண்டுவிட்டனர்.

சிறந்த ஆராய்ச்சி நூல்கள் இரண்டை எப்போதோ அவர் இயற்றி முடித்து, இப்போதும் கைவசம் வைத்துக்கொண்டிருக்கிறார். அவற்றை அவர் வெளியிடுவதற்கு இன்னும் வாய்ப்பில்லாமலே கிடக்கின்றது. காரணம்: ஒருபுறம் அதனை அவர் தாமே வெளியிட வேண்டும் என்று விழைகிறார். பிறிதொருபுறம் சிறந்த வெளியீட்டாளர் எவரும் அதனை வெளியிட முன்வர'மாட்டேன்' என்கின்றனர்.

அந்த நூல்களை அவர் தாமே வெளியிடவேண்டும் என்று எண்ணுவதற்குக் காரணம், அந்நூல்களை மக்கள் அனைவரும் வாங்கிப் படிக்கும் நிலையினை, வாய்ப்பினை ஏற்படுத்தவேண்டும் என்ற விழைவு. அதற்கு அதனை அடக்க விலையில் விற்பனை செய்வதுதான் வழி. அடக்க விலையில் வெளியிட அவரைத்தவிர, அவரைப்போன்ற இரண்டொரு, அல்லது ஒருசில நல்லறிஞர்களைத் தவிர, வேறு யாரால் முன்வரமுடியும்? வேறு யார் முன்வருவார்கள்? அந்த ஒரு சில நல்லறிஞர்கூட முன்வந்தால் மட்டும்போதுமா? முன்வருவதற்கு முன் பணம் வந்தாகவேண்டுமே, அவர்கள் எண்ணப்படி நூலை வெளியிட! அது எங்கிருந்து கிளம்பும்? எங்கிருந்து புரளும்? வறுமையை உடைமையாகக்கொண்ட அந்தக் கூட்டத்தால் முடிந்த—முடியும் செயலா அது?

"போய்த் தொலையட்டும். நம் உழைப்பைக்கொண்டு எவனோ இலாபம் அடைந்து நன்றாக வாழட்டும். நூல் வெளிவந்தால் சரி' என்று வேறுவழி இல்லாமையால் அடுத்தாற்போல் முடிவு செய்தார். அந்த முடிவுப்படி அவரிடம் அடிக்கடி வந்து, பேசிவிட்டுப் போகும் வெளியீட்டாளர் பலரில் அலசி ஆராய்ந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்துத், தாம் அருமையாக இயற்றிவைத்துள்ள இரண்டு நூல்களில் ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

அந்த வெளியீட்டாளர் மகிழ்ச்சி தலைகால் புரியாமல் அடித்துப்போட்ட நூலை வாங்கிக்கொண்டார். எதிர்பாராத இலாபம் திடீரென்று வந்த பெருங்களிப்போடு, வாணிபத்தில் நல்லதொரு வெற்றித் திருப்பம் என்ற எண்ணத்தோடு அதனை எடுத்துச்சென்றார்.

மூன்றாவது நாள் அந்த வெளியீட்டாளர் திரும்பி வந்தார். அந்த அருமையான நூல்—கையெழுத்துப்படிதான் —, வெளியீட்டாரின் கையிலிருந்தது. அதை வாங்கிக்கொண்டு போனபோது இருந்த மகிழ்ச்சி இப்போது அவரிடம் இல்லை.

மருதமலையனார் வெளியீட்டாளரை வியப்போடு நோக்கினார்.

வெளியீட்டாளர் தொண்டையை ஒரு முறை கனைத்துச் சரிபடுத்திக்கொண்டு பேசினார்:

"இது மிகவும் அருமையான நூல். இதை இயற்றியதன் மூலம் இந்த நாற்றாண்டின் 'எழுத்துலக மன்னர்மன்னர்' என்ற பெயரை நீங்கள் பெற்றுவிட்டீர்கள். இலக்கியத்துக்குக் கிடைக்கும் நோபல் பரிசு உலகத்திலே மிகச் சிறந்த பழைய — புதிய இலக்கியங்களையுடைய நம் தமிழகத்துப் பக்கம் எட்டிப் பார்ப்பது கிடையாது. இந்நூல் மட்டும் நோபல் பரிசுக்குக் காப்பாளராயுள்ளாரின் கவனத்துக்குப் போகுமானால், இந்த ஆண்டு அல்ல—எந்த ஆண்டு ஆனாலும் சரி,—இது அவர்கள் கவனத்துக்குப்போகும் ஆண்டில், இதையன்றி வேறு எதையும் நோபல் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கமாட்டார்கள். இது போன்றதொரு இலக்கிய நூல் பிற நாட்டில் இதுவரை வெளிவந்தது கிடையாது, இனி வெளிவரப் போவதுமில்லை. இத்துணை அருமையான நூலைத் தமிழில் மட்டும் வெளியிட்டால் போதாது. பிற பல மொழிகளிலும் இதை வெளியிட வேண்டும். தமிழரின் அறிவுச் செறிவையும். ஒழுக்கச் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதற்காகவே அமைந்த அருமையான நூல் இது. இந்த நூலையும், இதனைத் தமிழ் உலகுக்கு இயற்றி வழங்கிய தங்களையும் எப்படிப் பாராட்டுவது என்றே தோன்றவில்லை' என்று இதைப் படித்துப் பார்த்த தமிழ் ஆராய்ச்சியாளர் இருவர் சொன்னார்கள். 'இது அறிஞர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் மிக மிக இன்றியமையாததொரு குறிப்பு நூல்' என்றும் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இது சாமானிய மக்களைக் கவராது. இதன் சிறப்புக்களைச் சாமானிய மக்களால் புரிந்து கொள்ள முடியாது. அது ஒருபுறமிருக்க, இப்போதெல்லாம் படித்தவர்கள் பலரும் வெறும் பொழுதுபோக்குக் கதைகளையும், பயனற்ற பிற நூல்களையும்தான் விரும்பி வாங்குகிறார்கள். இது போன்ற ஆராய்ச்சி நூல்களையோ, அறிவைத் தூண்டும் கதைகளையோ விரும்பி வாங்கிப் படிப்போர் மிக மிகக் குறைவு.

"ஆகவே எல்லாரும் இதை விரும்பி வாங்கமாட்டார்கள். அதனால் இதை வெளியிடுவதன் மூலம் எதிர்பார்க்கும் அளவு விற்பனையைக் காணமுடியாது. அதனால்... இதோ இந்த நூறு ரூபாயை வைத்துக்கொள்ளுங்கள். அதோடு கூட இந்த மூலநூலும் இங்கேயே இருக்கட்டும். பிறிதொரு முறை வெளியிட ஏற்பாடு செய்யலாம்."

வெளியீட்டாளர் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினார்.

மருதமலையனார் மலைத்துப்போய், சற்றுநேரம் இயக்கமின்றி இருந்தார். பின் அந்த நூலை எடுத்தார். அதன் அருகில் கிடந்த அந்த நூறு ரூபாய் நோட்டை அப்போதுதான் பார்ப்பவர்போல் உற்று நோக்கினார். சட்டென்று எழுந்து, கிளம்பிப் போய்க்கொண்டிருந்த வெளியீட்டாளரைக் கூவிக் கைதட்டி அழைத்து வந்தார். வெளியீட்டாளர் திரும்பி வந்தார்.

"இந்த நோட்டு எதற்கு?"

"அ......வைத்துக் கொள்ளுங்கள்......"

"வேண்டாம் வேண்டாம்! எடுத்துக்கொண்டு போய்விடுங்கள் அதை. இனாம் வாங்கும் வழக்கம் என்னிடம் இல்லை."

வெளியீட்டாளர் மௌனமாய் நின்றார்.

மருதமலையனார் திண்ணையிலிருந்த நோட்டை எடுத்து அவரிடம் நீட்டினார்.

"எடுத்துக்கொண்டு போங்கள்!"

வேறு வழியின்றி நோட்டைத் திரும்ப வாங்கிக்கொண்டு வெளியீட்டாளர் பேசாமல் திரும்பிச் சென்றார்.

பாவம், இவர்களைப்பற்றி எல்லாம் குறைகூறி என்ன பயன்! இவர்கள் வணிகர்கள். இலாபம் இல்லாத வாணிபத்தை யார்தான் விரும்புவார்கள்! வாங்கிப் படிப்போர் விரும்புவதை வெளியிட்டால்தானே புத்தகங்களும் விலையாகும்; இலாபமும் கிடைக்கும். அறிவு நூல்கள் என்பதற்காக நல்ல நூல்களை வெளியீடு செய்தால் மட்டும் போதுமா? அவை விற்பனையாக வேண்டுமே! விற்பனையாகாவிட்டால், பீரோவில் வைத்து அழகு பார்க்கத்தானே அவை உதவும். இலாபம் நோக்கி இவர்கள் போட்ட முதல் என்னவது?" நீண்ட பெருமூச்சுக் கிடையே அவர் உள்ளம் இப்படி எண்ணியது.

அதன் பிறகு நூல் கேட்டுக்கொண்டு எந்த வெளியீட்டாளரும் அவரிடம் வருவது கிடையாது. அதற்காக அவர் ஊக்கங் குன்றி எழுதுவதை நிறுத்திக்கொள்ளவுமில்லை. மேலும் அருமையான நூல்கள் இயற்றிக்கொண்டே வந்தார். எழுதுவதை எப்போதாவது அவர் நிறுத்தியுள்ளார் என்றால், அது வெறுப்பாலோ, மனச்சோர்வாலோ அல்ல. ஒன்று உடல் நலம் குன்றிய வேளையாக இருக்க வேண்டும். அல்லது எழுதுகின்ற கோல், எழுதச் செலவாகும் மை, தாள் இவை இல்லாக் குறையாகத்தான் இருக்க வேண்டும்.—ஆமாம், தாளுக்கும், மைக்கும் அடிக்கடி அவரிடம் தட்டுப்பாடு வந்து கொண்டே இருக்கும்.

கண்மூடிக் கிடக்கின்ற உலகம் எப்போதும் மூடிய கண் மூடிய படியே கிடக்காது. ஒரு நாள் விழிப்பு நிலை வரும். அன்று, தாம் இயற்றியுள்ள அருமையான நூல்களை அறிவறிந்த மக்கள் அனைவரும் வாங்கிப் படிக்கும் வகையில் வெளியிடுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும் என்று அவர் எண்ணினார். அந்நாளை எதிர்பார்த்தபடி எழுதிக்கொண்டே இருக்கிறார்.

திடீரென்று ஊர்தியொன்று மருதமலையனார் அருகில் வந்து நின்றது — ஒரு குலுங்கலுடன். அவர் திடுக்குற்றுத் திரும்பி ஊர்திக்குள் நோக்கினார்.

"வணக்கம் மருதனாரே!"

ஆமாம், நடைபாதையோடு சென்றுகொண்டிருந்த மருதமலையனாரைப் பார்த்துப் பேசத்தான் ஊர்தி அங்கே நிறுத்தப்பட்டது. உள்ளே இருந்தவர் தமிழறிஞர், மொழித்துறை ஆராய்ச்சியாளர் தில்லையரசர்.

"எங்கே இப்படி?"

"இங்கோர் நூல் வெளியீட்டுக்குப்போய் வருகிறேன்"

"நூல் வெளியீட்டுக்கா?"

"ஆமாம்; உங்களுக்குத் தெரியாதா, நாலைந்து நாட்களாக செய்தித் தாள்களில் எல்லாம் முன் பக்கத்தில், கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருந்தார்களே!"

'அது எந்த எழுத்தாளருடைய நூல் வெளியீடு?' என்று யோசித்தபடி தமக்குள் கேட்டுக்கொண்டார் மருதமலையனார்.

தில்லையரசர் தம்மிடமிருந்த நூல் ஒன்றை அவரிடம் நீட்டினார்.

"ஓ, இதுவா!" என்று அதன் தலைப்பைப் பார்த்ததும் வியந்து கூறினார் மருதமலையனார்.

"இதற்கு நீங்கள்......?"

"பல தடவை வந்து வற்புறுத்தினார்கள். அவர்கள் அதிகாரத்திலிருப்பவர்களாயிற்றே! மறுக்க முடியுமா?"

"என்ன பேசினீர்கள்?"

"அதுவா? பிறகு சொல்கிறேன்—இப்போது ஓர் அவசர அலுவல்!"

தில்லையரசர் விடைபெற்றுக் கொண்டார். ஊர்தி கிளம்பியது.

மருதமலையனார் நடைபாதையில் நின்றபடியே அந்தப் புத்தகத்தைத் தொடக்கம் முதல் கடைசிவரை புரட்டிப் பார்த்துவிட்டு நடந்தார்.

'அமைச்சராகிவிட்டால் எல்லா ஆற்றல்களும்; எல்லாச் செய்திகள் பற்றிய அறிவும் வந்துவிடும் என்ற எண்ணம்போலும் இவர்களுக்கும், இவர்கள் நிழலில் வயிறு வளர்ப்பவர்களுக்கும். இதற்குத் தலைமை வகிக்கப் பேரமைச்சர். பாராட்டிப் பேச சிறந்த எழுத்தாளர்கள், அறிவுடையோர் — ஆமாம், அவர்கள் எண்ணுவதிலும் தப்பில்லையே! அந்த நாற்காலியில் அமர்ந்திருக்கும் வரையில் எல்லா வல்லமையும் வந்துதானே தீர்கிறது! அறிஞர் பெருமக்களையும் அடக்கி வசப்படுத்த முடியத்தானே முடிகிறது!

"நம்ம தேசத்திலே புளிப்பஞ்சம், புளிப்பஞ்சம் என்று கூச்சல் போடுறாங்களே, அந்தப் புளிப்பஞ்சம் ஏன் வந்தது தெரியுமா? ரோட்டிலே இருந்த புளிய மரங்களை எல்லாம் சனங்கள் அடியோடு வெட்டிவிட்டாங்க. ஏன் அப்படி வெட்டிவிட்டாங்க தெரியுமா? எல்லா இடத்திலேயும் விறகுப்பஞ்சம் வந்துட்டது. விறகுப் பஞ்சம் ஏன் வந்தது தெரியுமா? எல்லாரும் அடுப்பெரிக்க நினைக்கிறாங்க; அடுப்பெரிக்க ஆரம்பிச்சுட்டாங்க. ஏன் அடுப்பெரிக்க வேணும்? எதுக்காக அடுப்பெரிக்க வேணும்? தெரியுமா யாருக்காவது? இது தெரியாமே வந்து......வந்து ....வந்து......" இந்த மாதிரிப் பேச்சுக்கள்தாம் இன்று மக்கள் விரும்பிப் படிக்கும் இலக்கியமாக மாறவேண்டும் போலும்.'

இப்படி எண்ணினார் மருதமலையனார். பாவம், எதை எண்ணி அவரால் எதைச் செய்யமுடியும்? அவர் அமைச்சரா என்ன? ○

வாரீர்

[அருள்மொழி]

வீதியெல்லாம் அலங்காரம், வீடுகளெலாந் தோரணம். எங்கு நோக்கினும் மலர் மழை பெய்தன; மலர்களும் மாலைகளும் தென்பட்டன. இன்னிசைக் கருவிகள் ஒலிக்கும் இசைதனைக் கேட்க இரு செவி போதா. மகளிரும் சிறுர்களும், பூச்சூடிப் புத்தாடை உடுத்தி, அகில் மணம் கமழ முகங்களிலே புன்னகையும் மனத்திலே உவகையும் பொங்க, எங்கும் நிறைந்தும், வீரத்திற் சிறந்த காளையரும், மதியிற் சிறந்த புலவரும், இசையிற் சிறந்த பாணரும், ஆடலிற் சிறந்த விறலியரும், வீதிதோறும் பொங்கி வழிந்து அத்தாணி மண்டபம் நோக்கி விரைந்துகொண்டிருந்தனர். காவிரிப்பூம் பட்டினம் அன்று பூம்பொழிற் பட்டினமாக விளங்கியது.

எப்பொழுது? ஏன்? என்கிறீர்களா!

இதோ.........

கல்லாமற் குலவிச்சை பாகம் பட்ட காவலன் வாழ்க!

பொன்னிப்புனல் நாடு பெற்ற புகழ் வளவன் வாழ்க!

புலவர் தம்மைப் போற்றும் புகழ்ச் சோழன் வாழ்க!

கரிகாற் பெருவளத்தான் வாழ்க! என்ற வாழ்த்தொலிகள் நீள்விண்ணில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

ஆம், இத்துணைக்குங் காரணமென்ன?

வடவர்க்கு, வீரமென்பது இதுதான், பண்பெனப்படுவது இது, எனக் காட்டி எதிர்த்தோரை அடக்கி, வாழ்த்தியவர்க்கு வழங்கி, பணிந்தவர்க்கு இரங்கி, இமயத்தை வென்று புலிக் குறியிட்டு, முத்துப்பந்தரும், பட்டி மண்டபமும் கொண்டு தன்னுடு வந்த தன்னிகரில்லாத் தார்வேந்தன் வடக்கிற்கிடைத்த வெற்றியைக் கொண்டாடிய தினம் அன்று.

வடவரெல்லாம் விழிபிதுங்க, தென்னவரெல்லாம் மகிழ்வடைய வெற்றி வாகை சூடிய சோழனுக்கு வெற்றித் திருநாள்.

வடக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் புகழ் பரப்ப வீரத்தை இலைநாட்ட ஈழம் சென்று ஈராயிரம் சிங்களவரைச் சிறைபடுத்தினன்.

தன் ஆணைக்கு அடங்காத பிரதாபருத்திரன் எனும் குறுநில மன்னனைச் சிரமமேதுமின்றி அடக்கி இன்னும் பல வேளிரோடு, சிறைப் படுத்தப்பட்ட சிங்களவரையுஞ் சேர்த்துச் சிங்காரக் காவிரிக்கு இருபுறமும் கரையெடுத்துப், பகைவரையன்றி பொன்னியையும் அடக்கி— வளப்படுத்திய வளவன் தன் கடமைதனை வெற்றியுடன் முடித்ததற்கறிகுறியாகக் கொண்டாடிய விழா நாள் அன்று.

தமிழரின் பொன்னுள்!

தாழ்ந்தோரிலாத திருநாள்!

*

பார்மிசை புகழோங்கச் செய்து வாழ்ந்த அந்நாளுமெங்கே!

புகழ் குன்றி வாழும் இந்நாளுமெங்கே!

வடவரெல்லாம் வாழ்த்தி வணங்கிட வாழ்ந்த நாளெங்கே!

வடவர்க்கு வந்தனை செய்து தாள் பணியும் இந்நாளெங்கே!

இமயத்திற் குறியிட்டு இறுமாப்புக்காரரை எறும்பென ஊதிய கரிகாலன் எங்கே!

வடக்கின்றி வாழாது தென்னகம் என்றுகூறும் மதிமிகு அமைச்சர்களெங்கே!

தமிழகமே! திராவிடமே! நினைத்துப் பார், வாட்டமுற்ற முகங்களும் வாடி வதங்கிய உடல்களும் காணுத தமிழகம், வளமின்றி வதங்கியிருப்போரின் தொகை வளர்ந்திருக்கும் நிலை ஏற்படக் காரணமென்ன?

கரிகாலன் ஆண்ட அப்பொன்னுள் இனியும் வருமா?

வடக்கினின்று நமக்கு விடுதலை கிடைக்குமா?

கிடைக்கும் — கிடைக்கத்தான் வேண்டும்

கிடைக்கச் செய்யவேண்டும்.

வஞ்சிக்கப்பட்ட தென்னகம் வளம்பெற,

அடிமைத்தளை அறுபட,

அன்பால் கூடி,

இன்பத் திராவிடம் பெற வாரீர்.

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

நல்ல முறையில்

கருத்துக் குவியல்களுடன்

மிகச் சிறந்த முறையில்

வெளிவர ஏற்பாடுகள்

செய்யப்பட்டு வருகின்றன:

விலை விவரம் அடுத்த இதழில்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.